உ

கடவுள் துணை.

ஔவையார் அருளிச்செய்த

கொன்றைவேந்தன் மூலமும்

மஹாவித்வான்

ம - ள - ள - ஸ்ரீ

காஞ்சிபுரம் - ராமஸ்வாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார், தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை. எஸ். குமாரசுவாமிபிள்ளையவர்களால்

சென்னை:

பண்டிதமித்திர யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1906.

All Rights Reserved.

இதன் விலை அணா 5.

உ

கடவுள் துணை.

ஔவையார் அருளிச்செய்த

கொன்றைவேந்தன்

மூலமும் விருத்தியுரையும்.

காப்பு.

கடவுள்வாழ்த்து.

கொன்றைவேந்தன் செல்வனடியிணை
என்றுமேத்தித் தொழுவோம்யாமே.

(ப-ரை.) கொன்றை-கொன்றைமலர் மாலையைத்தரித்த, வேந்தன்-சிவபெருமானுக்கு, செல்வன்-புதல்வனாகிய விநாயகக் கடவுளுடைய, அடி இணை-சீர்பாதங்களிரண்டையும், என்றும் - எந்நாளும், ஏத்தி-துதித்து, தொழுவோம்-வணங்குவோம், யாம்-நாங்கள், எ-று.

(க-ரை.) சிவபெருமானுக்குப் புதல்வனாகிய விநாயகக் கடவுளுடைய சீர்பாதங்களை யாம் எப்பொழுதுந் துதித்து வணங்குவோம் என்பதாம்.

(வி-ரை.) கொன்றைவேந்தன் என்பது முதற்குறிப்பான் வந்த பெயர். இச்சூத்திரம் வெண்செந்துறை எனப்படும். இது என்னுதலிற்றோவெனின், ஔவையார் தாம் வழிபடுகடவுளை வாழ்த்தியது நுதலிற்று; ஆதலால் இது வழிபடுகடவுள் வாழ்த்தெனக் கொள்க. கொன்றை - ஓர்மரம், அது அதன்மலரை யுணர்த்தலால் முதலாகு பெயராகவும் அது அதனால் தொடுக்கப்பட்ட மாலையை யுணர்த்தலால் கருவியாகு பெயராகவும் கொள்ளப்படுதலால் கொன்றை இருமடியாகுபெயர். "தேவர்கோனாய் நின்ற தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர்கோனாய் நின்ற முத

ல்வன்'' என்றும், ''முத்துவானவர்த முடித்தொகைகள் கழியாக் கழ
ற்றில்லைக்கூத்தன்'' என்றும், ''ஏழுடையான்பொழில்'' என்றும்,
''வேகங்கெடுத்தாண்டவேந்தன்''என்றும்,விண்கடநாயகன்'' என்று
ம்,''பனிமாமதிக்கண்ணிவிண்ணோர்பெருமான்'' என்றும் மேலோர்
பலபடப் புகழ்தற்குரிய மேலோனாதலால்,சிவபெருமானை 'வேந்தன்'
என்றார். கொன்றைவேந்தன் என்றது ஏனைய வேந்தரினின்றும் வே
றுபடுத்தற்கென்க. சிவபெருமானது மிகுதியாகிய அன்பிற்குரியராத
லால் விநாயகக்கடவுளை 'செல்வன்' என்றார். நனவுகனவு முதலிய
எல்லா அவஸ்த்தைகளிலும் என்பார் 'என்றும்' என்றார். ஏத்துதலா
கிய வாக்கின்தொழிலும்,தொழுதலாகிய காயத்தின் தொழிலும்கூறு
தலால், இனம்பற்றி சிந்தித்தலாகிய மனத்தின்தொழிலும் சேர்த்து
ரைத்துக்கொள்க; கொள்ளவே முக்கரணவழிபாடடங்கிற்று. இங்
ஙனம் நான்முகத்துக் கடவுள் வாழ்த்துக் கூறுதலெற்றுக்கெனின்,
எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி யினிது முடிதற்பொருட்
டென்க. யாம் தொழுவோம் என முடித்துக்கொள்க.

நூல்.

1. அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்.

(ப-ரை.) முன் அறிதெய்வம்-(ஒருவன்) முன்பு அறிந்து வண
ங்கத்தகுங்கடவுள்,அன்னையும் பிதாவும்-தாயும்தந்தையுமாம்,எ-று.

(க-ரை.) ஒருவன் முன்னேயறிந்து வணங்குதற்குரிய கடவுள்
தாயும் தந்தையுமாம் என்பதாம்.

(வி-ரை.) முன்னறிதல் அறிந்து வணங்குதற்காதலால் அறிந்து
வணங்கப்படுங் கடவுள் என விரித்துரைக்கப்பட்டது. அறிதெய்வம்
என்றது உண்பொருள் என்றாற்போலச் செயப்படுபொருள் கொ
ண்டு முடிந்த காலங்கரந்துநின்ற வினைத்தொகையாதலால், அவ்வாற
ன்றிப் பொருளுரைக்கப்படாதெனக்காண்க. அவன் முன்னறிதலா
வது, அவர்உயிரோடு வாழ்ந்தகாலத்தும் மரித்தகாலத்தும் எனக்கா
ண்க. மரித்தகாலத்து முன்னறிந்து வணங்குதலாவது, அவர் தென்
புலத்தாராக அவரைநோக்கிச் செய்வனசெய்துவணங்குதல். தந்தை

தாய் என்னும் இருவருள்ளும் தாய் பத்துமாசம் சுமந்து பெற்று வளர்த்து, பிணிமுதலிய நேர்ந்தவிடத்துத்தான் விரும்பின பண்டங்களை யுண்ணாது பத்தியங்காத்து பலபடியாலும் விருத்தியடைவித்தவளாதலாலும் அவளது அன்பின் மிகுதியைக் கருதிச்செய்ந்நன்றி பாராட்டவேண்டுதலாலும் அன்னையும் பிதாவும் எனத் தாயை முற்கூறினார். "அன்னை தயையும்" "தாயிற் சிறந்த தயாவானதத்துவனே!" "தாயே தந்தையெனும்" "மாதாவினைப்பிதுவைத் திருமாலை வணங்குவனே" எனப் பலவிடத்தும் அன்னையை முற்கூறுதலுங் காண்க.

2. ஆலயந்தொழுவது சாலவுநன்று.

(ப-ரை.) ஆலயம்தொழுவது-(பின்பு) ஆலயங்களிலுள்ள கடவுள்களை வணங்குவது, சாலவும்நன்று - ஒருவனுக்கு மிகவும் நன்று, எ-று.

(க-ரை.) (பின்பு) கோயிலிற்போய் அங்குள்ளகடவுள்களைவணங்குவது ஒருவனுக்கு மிகவும் நன்றென்பதாம்.

(வி-ரை.) மேலேமுன்புஎன்றதனால் இங்கேபின்புஎன்பது வருவிக்கப்பட்டது. அவரை இரண்டிடத்தும் முன் அறிந்து வணங்காது ஆலயக்கடவுள்களை வணங்கினால் அதனால் பயனில்லை யென்பது இச்சூத்திர மிரண்டாலும் பெறப்பட்டபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இல்வாழ்க்கை-௩- ம் பாட்டு,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

எனக்கூறிய திருவள்ளுவநாயனார்க்கும் இதுவே கருத்தெனக் காண்க. என்னெனின், தென்புலத்தாரைப் போற்றுதல் முன்னும் தெய்வத்தைப்போற்றுதல் பின்னும் அவர் உயிரோடிருந்தகாலத்துத் தன்னைப்போற்றுதற்கு முன் சுற்றத்தைப் போற்றுதலுள் அடங்கவும் வைத்தமையாலென்க. ஆலயம் இடவாகுபெயராய் அங்குள்ள கடவுள்களையுணர்த்திற்று. தெய்வவணக்கம்என்பதிற்போல. தொழுதல் என்பதில் முக்கரண வழிபாடும் அடங்கிற்று. முக்கரணங்களா

வன:-மனம், வாக்கு, காயம் என்பன. இவற்றின் வழிபாடுகளாவன-: முறையே சிந்தித்தல், வாழ்த்தல், வணங்கல் என்பனவாம்.

3. இல்லறமல்லது நல்லறமல்ல.

(ப-ரை.) இல்லறமல்லது - இல்லறமல்லாததாகிய துறவறமானது, நல் அறம் அல்ல-(பிறன் பழிக்கத்தக்க கூடாவொழுக்கமில்லாதிருத்தல் அரிதாகலால் இதைப்போல) நல்லறமன்று, எ-று.

(க-ரை.) இல்லறம்போலத் துறவறஞ் சிறந்ததன்றென்பதாம்.

(வி-ரை.) வேறு இல்லை உண்டு என்னுங் குறிப்பு முற்றுவினைகள்போல, அல்ல என்பதும் ஐம்பான் மூன்றிடத்தும் இக்காலத்துப் பயின்றுவருவதோர் குறிப்புமுற்றுச்சொல். இல்லையென்பதன்கண் ஐகாரம்போல அல்ல என்பதில் அகரம் நின்றது. அது பால்காட்டும் விகுதியன்று. இதைப்போலவென்பது தொக்கு நின்றது.காரணம் வருவிக்கப்பட்டது. அறம் என்று நிச்சயமாகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே யென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இல்வாழ்க்கை-கூ - ம் பாட்டு,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று."

அஃதும்-அத்துறவறமும். பிறன் பழிப்பது-பிறனாற் பழிக்கப்படுவதாகிய கூடா வொழுக்கம். இல்வாழ்க்கை-இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை.

'நல்லறமன்று' என்றும் பாடம்.

4. ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்.

(ப-ரை.) ஈயார் - (தாமு முண்ணாது பிறர்க்கும்) உதவாதவருடைய, தேட்டை - பொருளை, தீயார்-(கள்வர் கொள்ளைக்காரர் கொடுங்கோல் மன்னர் முதலியோராகிய) தீயவர், கொள்வர் - பறித்துக் கொண்டுபோவர், எ-று.

(க-ரை.) தாமுமுண்ணாது பிறர்க்குங் கொடாதவருடைய பொ

ருளைக் கள்வர் முதலியோர் பறித்துக்கொண்டு போவர் என்பதாம்.

(வி-ரை.) தீயார் என்றதனால் கள்வர் முதலியோரென்பது பெறப்பட்டது. தாமுமுண்ணுதுபிறர்க்கும் என்பது இசையெச்சமாய் வருவித்துரைக்கப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-நன்றியில் செல்வம்-கூ-ம்பாட்டு,

"அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்."

தற்செற்று - தன்னைவருத்தி.

"உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி."

எனப் பிறரு மிவ்வாறு கூறுதல் காண்க.

உடம்புசெற்றும் - உடம்பைவருத்தியும், உய்த்தீட்டுதல்- ஆராய்ந்து சம்பாதித்தல், கரி-சாட்சி.

5. உண்டிசுருங்கிற் பெண்டீர்க்கழகு.

(ப-ரை.) உண்டி - (கணவனுடைய ஆதாயவளத்தினில்) உண்ணப்படுவது, சுருங்கின் - சுருங்கச் செலவு செய்ய வல்லராயின் பெண்டீர்க்கு - (அது) வாழ்க்கைத் துணைவியராகிய பெண்டீர்க்கு, அழகு - அழகாகும், எ-று.

(க-ரை.) கணவனது வருவாய்க்குத்தகச் சுருங்கச் செலவுசெய்வது வாழ்க்கைத்துணைவியராகியபெண்டிர்க்கு அழகாகுமென்பதாம்.

(வி-ரை.) உண்டி - உண்ணப்படுவது. உண்டிசுருங்கின் என்றதனால் ஆதாயவளத்தில் என்பதும், பெண்டீர்க்கழகு என்றதனால் சுருங்கின்என்பதற்கு சுருங்கச் செலவுசெய்ய வல்லராயின் என்பதும் பெறப்பட்டன. நற்குணநற்செய்கைக ளுடையராயினும் தம் கணவருடைய ஆதாயவளத்தையறிந்து அதனின் மேற்படாமல் செ

லவு செய்து குடித்தன்மை செய்யும் அழகுடையவரே வாழ்க்கைத் துணைவியரென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வாழ்க்கைத் துணைநலம்-க-ம்பாட்டு,

“மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.”

மனைத்தக்க-மனையறத்திற்குத்தகுந்த, மாண்பு-நற்குணநற்செய்கைகள். தற்கொண்டான்-தன்னைக்கொண்டகணவன். வளத்தக்காள் வருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையவள். வளம்-செல்வம். நற்குணங்களாவன:—துறந்தாப் பேணலும், விருந்தயர்தலும் வறியார் மாட் டருளுடைமையும் முதலியன. நற்செய்கைகளாவன:- வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களையறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. “உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு” என்றும் பாடம். இதற்கு போசநம் அளவிற்குறைதல் பெண்களுக்கு அழகாகும் என்பதுபொருள். இப்பொருள் சிறவாமையறிக.

6. ஊருடன்பகைப்பின் வேருடன்கெடும்.

(ப-ரை.) ஊருடன் - (அரசன் தீவினைகளைச் செய்து) குடிகளோடு, பகைப்பின் - பகைப்பானாயின், வேருடன் - (விரைவிலே) அடியோடே, கெடும் - கெடுவான், எ-று.

(க-ரை.) அரசனானவன் கொடுங்கோலனாய்த் தனது அரசாட்சிக்குள்ளிருக்குங் குடிகளுடன் பகைகொள்வனாயின், விரைவிலே அடியோடே கெடுவான் என்பதாம்.

(வி-ரை.) ஒருவன் தன் ஊரிலுள்ளா ரனைவரோடும் பகைத்தல் எலாமையின் இது அரசனைநோக்கிற்று. ஊர் ஊரிலுள்ள குடிகளையுணர்த்தலால் இடவாகுபெயர். அரசன்தீவினைகளைச்செய்தலாவது-கொடுங்கோல் செலுத்தல். வேர் - வமிசம். பகைப்பின் கெடும் என்றமையால், பகையானாயின் வமிசாபி விருத்தியாய் வாழ்வன் என்றதாயிற்று. கெடுதல் - அழிதல்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வெருவந்த செய்யாமை - ௩-ம் ௪-ம் பாட்டுகள்,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்."

"இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி யொல்லைக் கெடும்."

வெருவந்த - குடிகள் வெருவத் தகுந்த செயல்கள். வெங்கோலன் - கொடுங்கோலை யுடையவன். ஒருவந்தம்-நிச்சயமாக. ஒல்லை, விரைவு.

இன்னாச்சொல் - கடுஞ்சொல். உறை - ஆயுள். கடுகி - குறைந்து. இச்சூத்திரத்திற்கு, தானிருக்கும் ஊராருடன் ஒருவன் விரோதித்தால், அவன் தன் வமிசத்துடன் கெடுவான் எனப்பொருள்கூறுதலுமுண்டு. அப்பொருள் சிறவாமை யறிக.

7. எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.

(ப-ரை.) எண்ணும் - தருக்க நூலும், எழுத்தும் - இலக்கண நூலும், கண் எனத்தகும் -(மக்கட்கு) இரண்டு கண்களென்று சொல்லத்தகும், எ-று.

(க-ரை.) தருக்கநூலும் இலக்கணநூலும் மக்கட்கு இரண்டு கண்களென்று சொல்லத்தகும் என்பதாம்.

(வி-ரை.) எண் - தருக்கநூல். இதைப் பற்றி ஆத்திசூடியில் எண்ணெழுத்திகழேல் என்பதற்கு விரிவாயெழுதி யிருத்தல் காண்க. இவ்விரண்டனுள் ஒன்றிருப்பின் அமையாதென்பது தோன்ற 'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்' என்றார். இதனால் இவற்றுள் ஒன்றையே கற்றவன் ஒற்றைக்கண்ணனை நிகர்ப்பன் என்றதுமாயிற்று. கண்ணெனப் பொதுப்படக் கூறினாரேனும் எண்ணுமெழுத்தும் கற்றற்குரியார் மக்களாதலால், மக்கட்கு என்பது வருவித்துரைக்கப்பட்டது. எண்ணுமெழுத்தும் என்றதற்கேற்ப, கண் என்பதற்கு இரண்டு கண்களெனப் பொருள்கூறப்பட்டது. இவைதரும்

என்றமையால் ஏனைய தகாவென்றது மாயிற்று. கண்களிரண்டு மில்லாதவனுக்குப் பதார்த்த தரிசகமெப்படி யில்லையோ, அப்படியே இவ்விரண்டு மில்லாதவனுக்கு வீட்டுநூ லுணர்ச்சியும் பரமார்த்ததரிசகமு மில்லையாமாதலால் இவற்றைக் 'கண்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கல்வி - உ - ம் பாட்டு,

" எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. "

என்பவென்பவற்றுள் முன்னைய விரண்டும் அஃறிணைப் பன்மைப்பெயர். பின்னது உயர்திணைப் பன்மைவினை. உயிர்க்கு - மக்களுயிருக்கு.

8. ஏவாமக்கள் மூவாமருந்து.

(ப-ரை.) ஏவாமக்கள் - இதனைச் செய்யக்கடவீர்க ளென்று ஏவாமலே குறிப்பறிந்து ஒரு காரியஞ்செய்யத்தகுந்தமக்கள், மூவா (அவர்களைப் பெற்ற தாய்தந்தையர்க்குச்) சாவாமைக் கேதுவாகிய, மருந்து - ஔடதம்போல்வர், எ-று.

(க-ரை.) தாய்தந்தையர் ஏவாதிருக்கக் குறிப்பறிந்து அவர்நினைத்தகாரியத்தைச் செய்து முடிக்கத்தக்க மக்கள், அத்தாய் தந்தையர்க்குச் சாவாமைக்குக்காரணமாகியஒருஔடதம்போல்வரென்பதாம்.

(வி-ரை.) ஏவுதல் - கட்டளையிடுதல். மக்கள் என்னும்பொதுப்பெயர் இங்குச்சிறப்பாய் ஆண்மக்களையே குறித்தது, மூவா என்பதற்குப் பகுதி மூ. மூத்தல் - முதிர்தல், அது முதிர்ச்சியினிறுதியெல்லையாகிய சாக்காட்டினை யுணர்த்திற்று. மூப்பு - ஆகுபெயர். ஏவினுஞ்செய்யாதவரும் குறிப்பறிந்து செய்யாதவரும் ஆகியமக்கள்அவர்களைப் பெற்றவர்க்கு ஒரு நோய்போல்வ ராதலால், ஏவா மக்களை 'மூவாமருந்து' என்றார். போல்வர் என்பதுசொல்லெச்சமாய்க்குறைந்துநின்றது. இவ்வாறு கூறினதனால் ஏவவுஞ்செய்யாதவனுகி தானுமுணராதவனான ஒருவன் சாயளவும் பெற்றவர்க்கும் நிலத்திற்கும் நோய்போல்வ னென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புல்லறிவாண்மை-அ-ம் பாட்டு

" ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். "

தேறான் - அறியான். அவ்வுயிர் - அவனுயிர். நோய் - பிணி (நிலத்திற்கு நோய்).

9, ஐயம்புக்குஞ் செய்வினைசெய்.

(ப-ரை.) ஐயம்புக்கும் - பிச்சை யெடுத்தாயினும், செய்வினை- (அப்போதே) செய்யத்தக்க வினையாகிய ஒப்புரவை, செய் - நீசெய் எ-று.

(க-ரை.) பிச்சை யெடுத்தாயினும் செய்யவேண்டிய ஒப்புரவை நீசெய் யென்பதாம்.

(வி-ரை.) செய்வினை செய்தற்குரிய வினையென விரியும். செய் வினையென்றதனாலும் செய்யென விதித்தலாலும் செய்வினையென் றது ஒப்புரவையுணர்த்திற்று. ஒப்புரவு - உபகாரம். செல்வஞ் சுரு ங்கி வறுமை கூர்ந்திருப்பினும் அப்போதும் செய்யத்தகுந்த வொப் புரவைத் தாழ்த்துச்செய்ய லாகாமையால் ' ஐயம்புக்குஞ்செய்வினை செய் ' என்றார். புக்கேனும் என்பது புக்கும் என ஏன்விகுதிகுறை ந்துநின்றது. இப்படிக்கூறியதனால், ஐயம்புக்க காலத்தும் செய்யத் தகாதவினைகளைச்செய்யற்கவென்பதுபெறப்பட்டது. செய்யத்தகாத வினைகளாவன:- களவு, கொலை முதலாயின.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒப்புரவறிதல் - அ-ம் பாட்டு,

" இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். "

இடன் இல் பருவம் - செல்வஞ் சுருங்கினகாலம். ஒல்கார்-தளா ரார். காட்சியவர் - அறிவுடையார். ஒப்புரவிற்கு - ஒப்புரவு செய்த ற்கு. கடன் - கடன்மை. கடனறிகாட்சியவர் என்றமையால், பிற ரெல்லாமொழியினும்ஒப்புரவையொழியாரென்பதுபெறப்பட்டது.

"ஐயம்புகினுஞ்செய்வனசெய்" எனப்பாடமோதி, பிச்சையெடுத்தாலும் செய்யத்தகுங் கருமங்களையே நீ விடாதுசெய் எனப்பொருள் கூறுவாருமுளர்.

10. ஒருவனைப்பற்றி யோரகத்திரு.

(ப-ரை.) ஒருவனை - உன்னைத் தாங்கத் தகுந்த நிலையையுடைய ஒருவனை, பற்றி - சார்பாகப்பற்றிக்கொண்டு, ஓர் அகத்து இரு - ஓரிடத்திற்றானே நீ நிலைத்திருப்பாயாக, எ-று.

(க-ரை.) உன்னைத் தாங்குதற்குரியவொருவனையாதரவாகப் பற்றிக்கொண்டு ஓரிடத்திலே தானே நீ நிலைபெற்றிருப்பாயாகவென்பதாம்.

(வி-ரை.) ஒருவனைப்பற்றி யோரகத்திரு என்றதில், ஒருவன் என்றது தளர்ந்தகாலத்துத் தாங்குதற்குரிய வுயர்ந்தநிலையையுடையவனென்பதும், பற்றியோரகத்திரு என்றது தாழ்ந்த நிலையையுடைய நீ அவனைச் சார்பாகப் பற்றிக்கொண்டு ஓரிடத்திற்றானே யமைந்திரு, பலவிடங்களிற் சென்றுழலாதை யென்பதும் விளங்கிற்று. முதலிலாதவர்க்கு இலாபமில்லாததுபோல உயர்ந்தவனாகிய வொருவனது சார்பில்லாதவர்க்கு நிலையில்லை யென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பெரியாரைத்துணைக்கோடல் - கூ-ம் பாட்டு,

"முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை."

ஊதியம் - இலாபம். மதலை - தூண். சார்பு - ஆதரவு.

11. ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்.

(ப-ரை.) வேதியர்க்கு - மறையோர்க்கு, ஒழுக்கம் - ஆசாரமானது, ஓதலின் - வேதமோதுதலினும், நன்றே - நன்மையுடையதேயாம். எ-று.

(க-ரை.) மறையோர்க்கு வேதாத்தியயநத்தினும் ஒழுக்கமே

சிறந்த தென்பதாம்.

(வி-ரை.) ஓதுதல் எல்லார்க்கும் உரியதாயினும் வேதியர்க்கு என்றமையால் வேதமோதுதல் எனப் பொருளுரைக்கலாயிற்று. ஒழுக்கமாவது: அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு நூல்களால் விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்குச் சொல்லப்பட்ட அறங்களின் வழுவாதொழுகுதல். வேதியர் வேதத்தை மறந்தாலுங் குற்றமில்லை, மறுபடியுங் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கத்திற் றவறினால் அவரது பிறப்பேகெடுமாதலால், ஓதலினும் ஒழுக்கமே சிறந்ததென்பது இதனாற் கூறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-ஒழுக்கமுடைமை-சு-ம்-பாட்டு,

“ மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். ”

மறப்பினும் என்றது மறக்கலாகாதென்பதை வற்புறுத்தற்கு. ஓத்து - வேதம். பிறப்பு - வருணம். ஒழுக்கம்-ஆசாரம்.

12. ஔவியம்பேசுத லாக்கத்திற்கழிவு.

(ப-ரை.) ஔவியம் பேசுதல் - ஒருவன் பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமையை யுள்ளேவைத்துப் பேசுவது, ஆக்கத்திற்கு - அவனது செல்வத்திற்கு, அழிவு - கேட்டுக்கேதுவாம், எ-று.

(க-ரை.) ஒருவன் பிறர் செல்வத்தைக்கண்டு பொறாமை வார்த்தை பேசுவானாயின், அது அவன் செல்வத்தை யழிப்பதற்குக் கருவியா மென்பதாம்.

(வி-ரை.) ஔவியம் பொறாமையாதலால் பேசுதல் உள்ளே வைத்துப்பேசுதல் என்பது பெறப்பட்டது. ஆக்கம் ஆக்கத்திற்குக் காரணமாகிய செல்வத்தையுணர்த்தலால் காரியவாகுபெயர். அழிவு-அழிவைத்தருவது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-அழுக்காறாமை-கூ-ம்-பாட்டு,

" அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். "

அறன் - அறம். ஆக்கம் - செல்வம். பேணாது - மகிழாமல். அழுக்கறுப்பான் - பொறாமைப் படுவோன்.

13. அக்கமுங்காசுஞ் சிக்கெனத் தேடு.

(ப-ரை.) காசும் - திரவியத்தையும், அக்கமும் - (அதை யநுபவித்தற்குரிய) சுற்றத்தையும், சிக்கென - விரைவாக, தேடு - நீ தேடுவாயாக, எ-று.

(க-ரை.) திரவியத்தையும் அதை யநுபவித்தற்குரிய சுற்றத்தையும் நீ விரைந்து தேடுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) அகராதிக் கிரமம்பற்றி அக்கமுங்காசும் என்றார். ஆயினும் காசும் அக்கமும் எனப் பொருளியையபுக்கேற்ப மாறிக் கூட்டுக. சிக்கென என்பது பொள்ளென என்பதுபோல விரைவுக்குறிப்புணர்த்தி நின்றது. அக்கம் - உள்ளிடம். அது இடவாகுபெயராய் உள்ளிடத்தாராகிய சுற்றத்தாரை யுணர்த்திற்று. அதனை அக்கம்பக்கம் யாருமில்லை என்னும் செந்தமிழ்நாட்டு வழக்கு நோக்கி யறிக. பக்கம் - அயலார், அதுவும் இடவாகுபெயர். நீ நன்முயற்சி செய்து திரவியத்தைத் தேடும்போதே, காகம் இரைதேடிக் கண்டபோது தன் சுற்றத்தைத் தேடுவதுபோல, அதை யநுபவித்தற்கு நின் சுற்றத்தையும் விரைந்துதேடு என்பது இதனாற்போந்த பொருள். ஆகவே, இவ்வாறு தேடுவாயாயின் அறமும் இன்பமுமே யன்றிப் பொருளு மெய்துமென்பது பெறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - எ - ம் - பாட்டு,

" காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. "

கரவா - மறையாமல், கரைந்து - அழைத்து, அன்னநீரார்க்கு - அத்தன்மைத்தாயவியல்பினை யுடையார்க்கு. அத்தன்மைத்தாயவியல்பாவது - தாம் நுகர்வன வெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

"அஃகமுங்காசுஞ்சிக்கெனத்தேடு" எனப்பாடமோதி, தானியத்தையும் திரவியத்தையும், நீ வீண்செலவு செய்யாமற் சம்பாதி எனப் பொருள் கூறுவாருமுளர்.

14. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.

(ப-ரை.) கற்பு எனப்படுவது-பெண்களுக்குப் பதிவிரதமென்று சொல்லப்படுவது, சொல் - தம் கணவருடைய வார்த்தையை, திறம்பாமை - தவறாமலே நடக்குந் தன்மையாம், எ-று.

(க-ரை.) தம் கணவரது சொல்லைக் கடவாது நடத்தலே பெண்களுக்குக் கற்பென்று சொல்லப்படுவதென்பதாம்.

(வி-ரை.) திறம்பாமை - கடவாமை. சொற்றிறம்பாமை யென்பதனுள், அவர் தம்மைக்காத்தலும் தம் கணவரைப் பேணுதலு முதலியவெல்லா மடங்குதலால் இதுவே கற்பென்பதும், இதனையுடையவரே வாழ்க்கைத் துணைவியரென்பது மாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வாழ்க்கைத்துணைநலம்-சு-ம்பாட்டு,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

இக்குறளினுள் சொற்காத்து என்பதற்குப் பரிமேலழகர் இருவர்மாட்டும்நன்மையமைந்தபுகழ்நீங்காமற்காத்தெனப்பொருள் கூறினர். "அடிசிற்கினியாளே யன்புடையாளே, படிசொற் கடவாதபாவாய்" என்பதற்குப் பொருள்-தனித்து வீட்டின் தலைவாயிற்படியையும் என்வாயிற்படிந்த சொல்லையும் ஒருபோதுங் கடவாதிருந்தபாவைபோல்வாளே என்பதாதலால் சொற்றிறம்பாமையே கற்பென்பது சிறந்து காட்டிற்று. தற்காத்து - (கர்ப்பினின்று வழுவாது) தன்னைக்காத்து, தற்கொண்டாற்பேணி - தன்னைக் கொண்டவனையும் உண்டிமுதலியவற்றாற் காப்பாற்றி, தகைசான்றசொல்-நன்மையமைந்தபுகழ். சோர்வு - மறவி.

15. காவலுனே பாவையர்க்கழகு.

(ப-ரை) பாவையர்க்கு - பெண்களுக்கு, காவல்தானே - தாங்கள் கற்பினாற் காக்கும் நிறைக்காவலும் கணவர் செய்யும் மதிலும் வாயில்காப்போரும் முதலிய சிறைக் காவலுமே, அழகு - அழகாவன, எ-று.

(க-ரை.) பெண்களுக்குத் தமது நிறைக் காவலும் கணவரது சிறைக்காவலுமே அழகுசெய்வன வென்பதாம்.

(வி-ரை.) பாவையர் என்பதற்குப் பாவைபோலு மழகுடையார் என்பது பொருளாதலால் இது உவமையாகுபெயர். இவர்களுக்கு நிறைக்காவலும் சிறைக்காவலும் அழகாயெனினும் வடிவழகிலையாயின் அவைபயனிலவென்பது தோன்ற 'பாவையர்' என வடிவழகுக்தோன்றக் கூறினர்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வாழ்க்கைத்துணைநலம்-எ-ம்பாட்டு,

“ சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. ”

சிறை - மதிலும் வாயில்காவலு முதலாயின. எவன் - யாது. நிறை - நிறுத்தல் (நெஞ்சைக் கற்பு நெறியி னிறுத்தல்). தலை - முதன்மையாகிய காவல்.

16. கிட்டாராயினும் வெட்டெனமற.

(ப-ரை.) கிட்டார்ஆயினும் - (உனக்குப்) பகைவராயினும், வெட்டெனல் - (அவர் குற்றத்தைப் பொறுத்து விசாரியாமல் உடனே) சிரச்சேதம் செய்யென்று கட்டளை யிடுவதை, மற - நீ கனவினுமறந்துவிடு, எ-று.

(க-ரை.) உனக்குப் பகைவராயினும் ஒரு குற்றஞ் செய்தால் பொறுத்து விசாரியாமல் உடனே தலையறுத்துவிடு என்று கட்டளை யிடுவதை நீ கனவினும் மறந்துவிடு என்பதாம்.

(வி-ரை.) கிட்டார் - பகைவர். ஒன்னார், நள்ளார், நண்ணார், குறுகார், அணுகார், பொருந்தார் என்பன்வும் இப்பொருளனவேயாம். பொறுத்து விசாரியாது அவரிடத்துப் பகைமை பாராட்டி சிரச்சே

தஞ் செய்தலாகிய மிக வொறுத்தலைச் செய்தல் அரசர்க்குத் தகாத செய்கையாதலால், நனவிலேயன்றிக் கனவிலும் மறந்துவிடு எனப் பொருள் கூறப்பட்டது. நனவு - சாக்கிராவஸ்த்தை. இச்சூத்திரம் அரசனை நோக்கிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-கண்ணோட்டம்-க-ம் பாட்டு,

" ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை."

ஒறுத்தாற்றுதல் - ஒறுக்கும், பண்பினர் கண்ணும் - இயல்புடையா ரிடத்தும், கண்ணோடி - கண்ணோட்டஞ் செய்து, பொறுத்தாற்றும் - பொறுக்கும், பண்பே - இயல்பே, தலை - அரசர்க்குச்சிறந்தகுணமாம். "கிட்டாதாயின் வெட்டெனமற" எனப் பாடமோதி, இச்சித்த தொருபொருள் கிடையாதாயின் சீக்கிரத்திற்றானே அதனை மறந்துவிடு எனப் பொருள் கூறுவாரு முளர்.

17. கீழோராயினுந் தாழவுரை.

(ப-ரை.) கீழோர் ஆயினும் - (உன்னால் சொல்லப் படுவோர்) கீழ்க்குலத்தோரா யிருப்பினும், தாழ - வணக்கந்தோன்ற, உரை - நீ இன்சொற்களையேசொல், எ-று.

(க-ரை.) உன்னாற் சொல்லப்படுவோர் கீழ்க்குலத்தவராயினும் வணக்கமாக அவரிடத்தும் இன்சொற்களையே சொல் என்பதாம்.

(வி-ரை.) தாழ என்றதனால் உரை யென்பதற்கு இன்சொற்களைச்சொல் எனப் பொருளுரைக்கப் பட்டது. இப்பணிவுடைமையும் இன்சொற் சொல்லுதலுமே உன்னை யழகுசெய்தற் கமைந்த ஆபரணங்களா மென்பதிதனாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-இனியவைகூறல்-ரு-ம்-பாட்டு,

" பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற."

பணிவு - தாழ்வு. (வணக்கம்). இன்சொலன் - இனிய சொல்லை

யுடையவன். அணி - ஆபரணம்.

18. குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை.

(ப-ரை.) குற்றம் பார்க்கின் - (அன்போடு நெடுநாள் பழகின சிநேகத்தைப் பாராது ஒருநாள் அவர்செய்த) குற்றத்தைப் பார்ப்பாராயின், சுற்றம் இல்லை - அவரைச் சுற்றமாகச் சூழ்வாரில்லை, எ-று.

(க-ரை.) அன்போடு நெடுநாள் பழகின சிநேகத்தைப் பாராது ஒருநாள் அவர் செய்த குற்றத்தைப் பார்ப்பாராயின், அவரைச்சுற்றமாகச் சூழ்வாரில்லை யென்பதாம்.

(வி-ரை.) குற்றம் - பிழை. (தவறு) குற்றம்பார்க்கிற் சுற்றமில்லையென்றதனால் குற்றம்பாராவிடிற் சுற்றமுண்டு என்பது தானே போதரும். சுற்றம் - சுற்றத்தார்; சூழ்ந்திருத்தலையுடையவராதலால் இவர்க்குச் சுற்றத்தார் எனப் பெயராயிற்று. ஒருவன் குணங் குற்றங்களிரண்டனுள்ளும் குற்றநீக்கிக் குணங்கொள்வாராயின் அவரைச் சுற்றத்தாரேயன்றி உலகத்தா ரெல்லாருஞ் சூழ்வ ரென்பதினாற் போந்த பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-சுற்றந்தழால்- கூ - ம்- பாட்டு,

“ பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். ”

திருக்குறள் - பழைமை - கூ - ம் பாட்டு,

“ கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. ”

வெகுளிபேணான் - கோவத்தை விரும்பாதவன், அவனின் - அவன்போல. மருங்கு - கிளை. (உறவினர்) கெடா - உரிமையறாத வழிவந்த-பழைமைபதாய்வந்த, கேண்மை-நட்பு. விழையும்- விரும்பும்

19. கூரியனாயினும் வீரியம்பேசேல்.

(ப-ரை.) சூரியன் ஆயினும் - (நீ வீரத்தன்மையிற்) சிறந்தவனேயாயினும், வீரியம் பேசேல் - நானே வீரனென்று கருவித்துப் பேசாதை, எ-று.

(க-ரை.) நீ மிக்கவீரனேயாயினும், நான் மிக்வும் வீரத்தன்மையுடையேனென்று கருவித்துப் பேசாதை யென்பதாம்.

(வி-ரை.) சூரியன் - சிறந்தவன். இப்படிகருவித்துப்பேசுதல் சிறுமைப் பண்பேயன்றிப் பெருமைப் பண்பல்லவென்ப திதனாற் போந்தபொருள். சூரியனாயினும் வீரியம்பேசேல் என்றமையால் சூரியனாகாவிடத்து வீரியம்பேசுதல் தகாதகாரியமென்பது தானே வெளியாயிற்று. ஆகவே ஒருவரும் வீரியம்பேச லாகாதென்பது இனிது விளங்கும்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பெருமை-அ-ம் பாட்டு,

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து."

பெருமை - பெருமையுடையார். பணியும் - அமைந்தொழுகுவார். சிறுமை-சிறுமையுடையார். வியந்து அணியும் - வியந்துபுனையாநிற்பர். புனைதலாவது பிறரினுந் தமக்கோர் மேன்மையை யேற்றிக் கொள்ளல்.

'சூரம்பாயினும் வீரியம்பேசேல்' என்றும் பாடம். இதற்கு, உன் கையிலிருப்பது கூர்மையாகிய அம்பானாலும், வீரத்தன்மையை நீ வீணாகப்பேசாதையென்பது பொருள்.

20. கெடுவதுசெய்யின் விடுவதுகருமம்.

(ப-ரை.) கெடுவது செய்யின் - (நீ சிநேகித்தவன்) காரியக் கெடுதி செய்வானாயின், விடுவது-(அவனோடுசொல்லாமலே) அவன் சினேகத்தைவிட்டு நீங்குவதே, கருமம்-(நல்ல) காரியமாகும், எ-று.

(க-ரை.) உன்னால் சினேகிக்கப்பட்டவன் காரியக்கெடுதிசெய்வானாயின் அவன் சிநேகத்தை அவனோடு சொல்லாமல் விட்டுவிடுவது நல்லகாரியமென்பதாம்.

(வி-ரை.) அவனோடு சொல்லின், மறுபடியும் உன்னைச் சிநேகித்தற்குரிய வழிதேடி, உன்னை முன்னிலும் அதிகமாய்க் கெடுத்துவிடுவான் என்பதிதனாற்போந்த பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - தீநட்பு - அ - ம் பாட்டு,

" ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். "

ஒல்லுங் கருமம்-முடியுங்காரியம். உடற்றுபவர்-முடியாதாக்குவோர். சொல்லாடார் - சொல்லாதே, சோரவிடல் - சோரவிடுக. சோரவிடுதலாவது விடுகின்றவாறு தோன்றாமல் ஒருகாலைக் கொருகால் ஓயவிடுதல்.

21. கேட்டிலுறுதி கூட்டமுடைமை.

(ப-ரை.) கூட்டம் உடைமை-நட்புடைமையானது, கேட்டில்-(ஒருவனுக்குக்) கேடுவந்தகாலத்தில், உறுதி - உறுதிப்படும், எ-று.

(க-ரை.) நட்புடைமையானது ஒருவனுக்குக் கேடுவந்தகாலத்தில் உறுதிப்படும் என்பதாம்.

(வி-ரை.) படும் என்பது குறைந்துநின்றது. ஒருவனுக்குச் செல்வமுண்டான காலத்தில், சிநேகப் பண்பில்லாதவரும் தம்மைச் சிநேகப் பண்புள்ளவரைப்போலவே காட்டிக் கேடுவந்தகாலத்தில் மாறுபடுவராதலால், அக்கேடுதானே நட்பினெல்லைகளை யளத்தற்குக் கருவியாகி, அப்போதும் மாறுபடாதவரையே நட்பென்றுணர்த்துமாதலால் ' கேட்டிலுறுதி கூட்டமுடைமை ' என்றார். கேடு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கெடு-பகுதி. கூட்டம் - தொழிற்பெயர், கூடுதல். கூடு - பகுதி.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நட்பாராய்தல் - சு - ம் பாட்டு,

" கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். "

கேட்டினும்-கேடுவந்தகாலத்தும், கிளைஞர்-உறவினர். கோல்-அளவுகோல்.

"கேட்டினுறுதி கூட்டுமுடைமை" எனப் பாடமோதி கைப்பொருளிழந்தகாலத்தில் மனந்தளராமையானது முன்போல அப்பொருளுடையனுந்தன்மையைச் சேர்க்கும் எனப் பொருள்கூறுவாருமுளர்.

22. கைப்பொருடன்னின் மெய்ப்பொருள்கல்வி.

(ப-ரை.) கைப்பொருள் தன்னின் - ஒருவன் கைவசப்பட்டிருந்த பொன்மணி முதலிய பொய்ப்பொருள்களினும், கல்வி - உயிர்சப்பட்டிருந்த கல்வியானது, மெய்ப்பொருள்-ஒன்றினாலும் அழியாத மெய்ப்பொருளாம், எ-று.

(க-ரை.) ஒருவன் கைவசமாயிருக்கிற பொன்மணி முதலிய பொய்ப்பொருள்களினும் உயிர்வசமாயிருக்கிற கல்வியானது ஒன்றினாலும் அழியாத மெய்ப்பொருளா மென்பதாம்.

(வி-ரை.) பொன்மணி முதலியவற்றைக் கைவசப்பட்டிருக்கும் பொருள் என்றமையால் கல்வியை உயிர்வசப்பட்டிருக்குங் கல்வியென்றும், கல்வி மெய்ப்பொருள் என்றமையால் கைப்பொருள் பொய்ப்பொருளென்றும் பொருள் கூறப்பட்டது. மெய்ப்பொருள் என்றமையால் அழியாமையும் பெறப்பட்டது. கைப்பொருள் சாதியொருமை. அது கைவசமாயிருப்பினும் கொடுங்கோன் மன்னர், தாயத்தார், கள்வர் முதலியோரால் கவர்ந்துகொள்ளப்படுதல், கொடுக்கக் குறைபடுதல் முதலியவற்றால் அழியுமாதலால் அது பொய்ப்பொருளென்றும், இது உயிர்வசமாயிருந்து ஒன்றினாலும் அழிவுறாது எக்காலத்தும் இன்பந்தந்தே நிற்றலால் மெய்ப்பொருளென்றுங் கூறப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கல்வி - ௪0 - ம் பாட்டு,

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

கேடு இல் விழுச்செல்வம்-அழிவில்லாத மேன்மையாகியசெல்வம். மாடு - செல்வம். மற்றையவை - மணிபொன் முதலாயின.

23. கொற்றவனறிதலுற்றிடத்துதவி.

(ப-ரை.) கொற்றவன் அறிதல் - (ஒருவன் அகலாதணுகாது தீக்காய்வார்போல நின்று) அரசனை யறிந்தொழுகுதல், உற்றிடத்து - அவ்வொழுகுத லுற்றவிடத்தே, உதவி - உதவிசெய்யும், எ-று.

(க-ரை.) ஒருவன் அரசனை யறிந்தொழுகுவனாயின் ஒழுகுந்தோறும் பயனடைவான் என்பதாம்.

(வி-ரை.) உற்றவிடம் உற்றிடம் என விகாரப்பட்டது. அறிதல் என்பது அதன்காரியந் தோன்றநின்றது. கொற்றவனறிதல் - செயப்படுபொருள் செய்ததுபோல நின்றது. எல்லைகடந்தொழுகினால், அவனாற் பயனின்மையும் கோவமும் பெறப்படுதலால், அகலாதணுகாது தீக்காய்வார்போல நின்று என்னும் இசையெச்சம் வருவித்துரைக்கப்பட்டது. இதனால், தீக்காய்வார் அகலாதணுகாது நிற்குந்தோறும் அத்தீயானது அவர்க்குப் பயன்படுமாறுபோல அவ்வாறு நின்றொழுகப் பெறின், பெறுந்தோறும் அரசன் பயன்படுவான் என்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மன்னரைச்சேர்ந்தொழுகல் - க - ம் பாட்டு,

"அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்."

அகலாது - மிக நீங்காமல், அணுகாது - மிக நெருங்காமல், இகல்வேந்தர் - மாறுபடுதலையுடைய அரசர். சேர்ந்து ஒழுகுவார் - சேர்ந்தொழுகுவோராகிய அமைச்சர் - கடிதின் வெகுள்வர் என்பது தோன்ற 'இகல்வேந்தர்' என்றார்.

24. கோட்செவிக்குறளை காற்றுடனெருப்பு.

(ப-ரை.) கோள் செவி - கோள்கேட்குஞ் செவியும், குறளை - கோட்சொல்லும், (இவ்விரண்டுங் கூடித்துயர்செய்தல் எதுபோலுமெனின்) காற்றுடன் நெருப்பு - காற்றோடு நெருப்புங் கூடித் துயர் செய்தல்போலும், எ-று.

(க-ரை.) கோள்கேட்குஞ் செவியும் கோட்சொல்லும், காற்றும் நெருப்பும்போலத் துன்பஞ்செய்யுமென்பதாம்.

(வி-ரை.) சேர்ந்து துயர் செய்வது என்பது உவமையினும் பொருளினும் குறைந்துநின்ற குறிப்பெச்சம். இது தொழிலுவமையன்று, பயனுவமையெனக் காண்க. அரசன் தனிமையிற்கேட்ட புறங்கூற்று மொழிகளைச் சான்றோர் அமைச்சர் முதலானவர்களோடே கூடி விசாரணை பண்ணாமல் கோவங்கொள்வானாயின், அது கொடுங்கோன்மையாதலால் குடிகளும் பகுதிகளும் தானும் அஞ்சுதற்குரிய வினையாய்த் துயர்செய்யு மென்றதாயிற்று. ஆகவே குடிகளும் பகுதிகளும் அஞ்சி நீங்குதலால் அரசன் செல்வஞ் சுருங்குமென்பது மாயிற்று.

இது அரசனை நோக்கிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வெருவந்தசெய்யாமை-அ-ம் பாட்டு,

" இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. "

இனத்தாற்றி யெண்ணாதவேந்தன் - காரியத்தைப் பற்றிவந்த எண்ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானுமெண்ணிச் செய்யாதஅரசன், சினத்து ஆற்றி சீறின் - அப்பிழைப்பால் தன்காரியம் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத்தின் கண்ணே செலுத்தி அவரை வெகுள்வானாயின், திரு சிறுகும் - அவனது செல்வம் நாடோறுஞ் சுருங்கும்.

25. கெளவைசொல்லின் எவ்வர்க்கும்பகை.

(ப-ரை.) கௌவைசொல்லின் - (ஒருவன்) பிறர் பழியையெடுத்துச் சொல்வானாயின், எவ்வர்க்கும் பகை - அவன் எல்லார்க்கும் பகையாவான், எ-று.

(க-ரை.) பிறர்பழியை யெடுத்துச் சொல்லுவோன் எல்லார்க்கும் பகையாவானென்பதாம்.

(வி-ரை.) கௌவை - பழிச்சொல்; அதனைக் கேட்டோர் யாவரும் நமது பழிகளையும் இவ்வாறே யெடுத்துச்சொல்லுவானென்று அவனிடத் தன்புசெய்யாது நீக்குவராதலால் 'எவ்வர்க்கும்பகை' என்றார், தனிக்குறிலாகிய எகரவினுமுன் வந்த வகரவொற் றிரட்டித்து

நின்றது. சொல்லாஞயின், அச்சொல்லாமை தவத்திற்குக் கொல்லாமைபோலச்சால்பிற்குப் பேரழகு செய்யுமென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-சான்ருண்மை-ச-ம் பாட்டு,

" கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. "

நோன்மை - தவம். கொல்லா நலத்தது - ஒருயிரையுங் கொல்லாத அறத்தின்கண்ணது. சொல்லா நலத்தது - பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கண்ணது. சால்பு - நிறைவு.

26. சந்ததிக்கழகு வந்திசையாமை.

(ப-ரை.) சந்ததிக்கு அழகு - பிள்ளைகளுக்கு அழகாவது, உவந்து இசையாமை - (அவர்கள் கல்வியறிவொழுக்கங்களைக்கண்ட தந்தையானவன் அவர்களுக்கெதிரே) மகிழ்ந்துரையா திருத்தலாம், எ-று.

(க-ரை.) தந்தையானவன், தன் பிள்ளைகளுடைய கல்வியறிவொழுக்கங்களைக்கண்டு அவர்களுக் கெதிரே அவர்களைப் புகழ்ந்துரைக்கலாகா தென்பதாம்.

(வி-ரை.) வெறுத்துரைக்க வேண்டு மென்பது குறிப்பெச்சமாய் நின்றது. உவந்திசையாமை யென்றதனல், கல்வியறிவொழுக்கங்களைக் கண்டு அவரெதிரேயென்பது பெறப்பட்டது. இதனல் அவ்வாறு மகிழ்ந்துரைத்தல், அவர்கள் கர்வித்து மேற்செல்ல நினையாமைக்குக் காரணமாய்க் கற்ருரவையிலே அவர்களை முந்தியிருக்கத்தாம் செய்யவேண்டுவதாகிய வுதவிக்கு விரோதமாகுமாதலால் அவ்விரோதத்தைச் செய்யாமல் வெறுத்துரைத்து அவ் வுதவியை முற்றவுஞ் செய்யவேண்டு மென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல்-எ-ம் பாட்டு,

" தந்தைமகற் காற்று நன்றிய வையத்து
முந்தி யிருப்பச் செயல். "

மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யும், நன்றி - நன்மை,

அவையத்து - கற்றோராது சபையின்கண், முந்தியிருப்பச் செயல்— அவரினும் மிக்கிருக்கும்படி கல்வியுடையனாக்குதல்.

"சந்ததிக்கழகு வந்திசெய்யாமை" என்று பாடமோதி தன் வமிசம்பெருகுதற்கு அழகாவது, மலடியாகச் செய்யாமல் தன்மனை யாளோடு கூடிவாழ்தலாம் என்று பொருளுரைப்பாருமுளர்.

27. சான்றோரேன்கை யீன்றோர்க்கழகு.

(ப-ரை.) சான்றோர் என்கை - (தம்மக்களைக் கல்வி கேள்விக ளிலே) நிறைந்தோரென்று கற்றோர் சொல்வது, ஈன்றோர்க்கு அழ கு - அவர்களைப்பெற்ற தாய்தந்தையர்க்கு அழகாகும், எ-று.

(க-ரை.) தம்மக்களைக்கல்வி கேள்விகளில் நிறைந்தோரென்று கற்றோர் புகழ்ந்து சொல்லுதலே அவர்களைப்பெற்ற தாய் தந்தை யர்க்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) சான்றோர் - நிறைந்தவர், சால் - பகுதி. என்கை - என்றல், தொழிற் பெயர். ஈன்றோர் - பெற்றோர், ஈன்-பகுதி. இத னால் சான்றோரென்கையைக் கேட்டு மனமகிழ்வது ஈன்றோர்க்கழ கா மென்றதாயிற்று. காரண காரியங்கள் வருவிக்கப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல்-
கூ-ம் பாட்டு, அ-ம் பாட்டு,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்."

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது."

ஈன்ற பொழுதின் - பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும், சான் றோன் - கல்விகேள்விகளால் நிறைந்தவன், என-என்று அறிவுடை யோர் சொல்ல.

தம்மின் - தம்மினும், மாநிலத்து - பெரியநிலவுலகத்தில், மன் உயிர் - நிலைபெற்றவுயிர், அறிவு - இயற்கையறிவு கல்வியானாய செயற்கையறிவு என்னுமிரண்டையுங் குறித்தது. உயிர் என்றது

அறிவுடையாரை. இக்குறட்பாட் டிரண்டனுள்ளும் முன்னையது தாயுவகைக் களவின்மையை யுணர்த்திற்று. பின்னையது தந்தைதாயரினும் அவையத்தா ருவகையை யுணர்த்திற்று. 'ஈன்றோட்கு' என்றும்பாடம். இதற்கு, பெற்றவட்கு என்பதுபொருள்.

28. சினத்தைப்பேணிற் றவத்திற்கழகு.

(ப-ரை.) சினத்தை - கோவத்தை, பேணின் - (தலையெடாமல்) காப்பானாயின், (அது) தவத்திற்கு - (ஒருவன் செய்யும்) தவத்துக்கு, அழகு - அழகாகும், எ-று.

(க-ரை.) கோவத்தைக் காத்தலே ஒருவன்செய்யுந் தவத்திற்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) பேணுதல் - காத்தல், அதாவது தடுத்தல். தலையெடாமல் என்பது குறிப்பெச்சம். எனவே, சினத்தைப்பேணின்தானுமின்புறுவான், தவமும் வளர்ந்தோங்கும் என்பதும், பேணாவிடின் தானுந் துன்புறுவான், தவமும் அழிந்துவிடும் என்பதுமாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வெகுளாமை - ரு - ம் பாட்டு,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்."

காக்கின்-காக்கவல்லனாயின். "சிவத்தைப்பேணிற்றவத்திற்கழகு" என்று பாடமோதி, முதற்பொருளாகிய பரமசிவத்தை ஒருவன் வழிபட்டால் அது அவன்செய்யும் தவத்திற்கு அழகாகும் என்று பொருள் கூறுவாருமுளர்.

29. சீரைத்தேடின் ஏரைத்தேடு.

(ப-ரை.) சீரை தேடின் - செல்வத்தை (நீ முயன்று) தேடவிரும்புவையாயின், ஏரை தேடு - முந்தி ஏர்த்தொழில் முயற்சியைத் தேடு, எ-று.

(க-ரை.) நீ செல்வத்தை முயன்றுதேட விரும்புவையாயின் முந்தி ஏர்த்தொழிலை முயன்று தேடுவாயாக வென்பதாம்.

(வி-ரை.) சீர் - செல்வம், இது காரியவாகு பெயர். ஏர் - ஆகுபெயர். தேடு என்றது அதன் அருமை தோன்றநின்றது. இதனால்

மற்ற முயற்சிகளும் அவற்றான்வருஞ் செல்வங்களும் இதன் கீழ்ப்படு மென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ச - ம் பாட்டு,

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

பல குடை நீழல் - பலவேந்தர் குடைநிழலதாய மண்முழுதும், தம் குடைக்கீழ் - தம்வேந்தர் குடைக்கீழே. அலகு-நெல். நீழலவர்--தண்ணளியுடையோர்.

30. சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்.

(ப-ரை.) சுற்றத்திற்கு - சுற்றத்திற்கு, அழகு - நீ செய்யும் அழகாவது, சூழ - (அது உன்னை) சூழ்ந்திருக்கும்படியாக, இருத்தல்- நீ நடுவேயிருந்து வாழ்தலாம், எ-று.

(க-ரை.) சுற்றத்திற்கு நீ செய்யும் அழகாவது அது உன்னைச் சூழ்ந்திருக்க, நீ நடுவேயிருந்து வாழ்தலாம் என்பதாம்.

(வி-ரை.) சுற்றம் - சுற்றத்தார், இது தொழிலாகுபெயர். சூழ்தல் - வளைதல், இருத்தல், ஆகுபெயர். சுற்றத்திற்கழகு என்பது தெய்வத்திற்குப் பிரார்த்தனை யென்றாற்போலக் குவ்வுருபு நேர்ச்சிப்பொருளில் வந்தது. இதனால், இப்படியிருந்து வாழ்தலே செல்வத்தைப் பெற்றதற்குப் பயன் என்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - ச-ம் பாட்டு,

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்."

பெற்றத்தால் - பெற்ற அதனால். பெற்ற என்பதில் அகரமும் அதனால் என்பதில் அன் சாரியையும் தொடை நோக்கிவிகாரத்தாற் றொக்கன.

31. சூதும்வாதும் வேதனைசெய்யும்.

(ப-ரை.) சூதும் - சூதாடலும், வாதும் - (கல்வியிற் சிறந்தோ

மைமுந்தி) தர்க்கித்தலும், வேதனைசெய்யும் - (பின்பு) துயர் செய்யும், எ-று.

(க-ரை.) சூதாடுதலும் கற்றுவல்லாரோடு முந்தித்தர்க்கித்தலும் பின்பு துன்பஞ்செய்யும் என்பதாம்.

(வி-ரை.) சூது - வென்றுபொருள் பெறுவது நிச்சயமாயினும் பாவஞ்சேர்தலால், அப்பொருளை யநுபவிக்கும்போது மீன் விழுங்கின தூண்டிலினிறைச்சிபோல உள்ளே நின்று துயர்விளைத்தலும், வாது - தர்க்கித்து வென்று பொருள் பெறுவது நிச்சயமாயினும், தீயொழுக்கமாகிய பாவஞ்சேர்தலால், அப்பொருள் உள்ளேநின்று துயர்விளைத்தலும் ஒத்திருத்தலால், இவ்விரண்டனையுங்கூட்டி 'வேதனைசெய்யும்' என முடித்தார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சூது - க - ம் பாட்டு,

" வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. "

வேறல் ஒருதலையன்றென்பது தோன்ற 'வென்றிடினும்' என்றும், கருமங்கள் பலவுங் கெடுதலின் 'வேண்டற்க' என்றும் கூறினார். சூதாடுவார் எய்தியபொருள் அவர் அதைவிட்டு நீங்காமைக்கு இட்டதோர் தூண்டிலென்பதும், அதனால் பின் துயருழத்தலும் உவமையாற் பெறப்பட்டன.

திருக்குறள் - அவையறிதல் - ரு - ம் பாட்டு,

" நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு. "

முதுவர் - பெரியோர், கிளவா - சொல்லாத, செறிவு - அடக்கம். தங்குறைவும் அவர் மிகுதியும் முந்து கிளந்தாற் படுமிழுக்கும் கிளவாக்கா லெய்தும் நன்மையும் அறிந்தேயடங்கினமையால், அவ்வடக்கத்தை 'நன்றென்ற வற்றுள்ளு நன்று' என்றார். இவ்விரண்டு திருக்குறளில் முன்னையது சூது துயர்செய்யு மென்பதற்கும், பின்னையது வாது துயர்செய்யு மென்பதற்கும் உதாரணமாகக் கொள்க.

32. செய்தவமுதிர்ந்தாற் கைதவமாளும்.

(ப-ரை.) செய் தவம் - நீ செய்யுந் தவமானது, முதிர்ந்தால் - நாளுக்குநாள் உயர்ந்து வருமானல், கைதவம் - பொய்யானது, மாளும் - நசிக்கும், எ-று.

(க-ரை.) நீ செய்யுந் தவமானது நாளுக்குநாள் உயர்ந்து வருமானல் பொய்யானது நசிக்கும், எ-று.

(வி-ரை.) கைதவம் - பொய், அது இங்கு அஞ்ஞானத்தையுணர்த்திற்று. இரவுநீங்கும் எனவே பகல்தோன்றும்என்பதுதானேயமைதலால், ஞானந்தோன்றும் என மிகைபடக்கூறாது 'கைதவமாளும்' என்றார். இது தவவொழுக்கத்தானை நோக்கிற்று. இதனல் தவத்தான் வருந்துன்பத்தைப் பொறுத்து அதனை முற்றறச் செய்தால், ஞானந்தோன்ற அஞ்ஞானம் நசித்தொழியும் என்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - தவம் - எ - ம் பாட்டு,

"சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."

சுட - தீயானதுசுட, சுடரும் - ஒளிவிடுகிற, துன்பம் சுடச்சுட - துன்பமானது வருத்தவருத்த, நோற்கிற்பவர்க்கு - தவஞ்செய்யவல்லார்க்கு.

"செய்தவமறந்தாற் கைதவமாளும்" எனப் பாடமோதி, செய்யுந்தவத்தை ஒருவன் மறந்தால், பொய்யாகிய அஞ்ஞானமானது அவனை யடிமை கொண்டாளும் என்று பொருளுரைத்தலுமாம்.

33. சேமம்புகினும் யாமத்துறங்கு.

(ப-ரை.) சேமம் புகினும்-நீ விழித்திருந்து காவல்காக்கப் போனலும், யாமத்து உறங்கு - ஒரு சாமத்தளவாயினும் நித்திரைசெய், எ-று.

(க-ரை.)நீ கண்விழித்துக் காவல்காக்கச் சென்றாலும் ஒருசாம நேரமாயினும் நித்திரைசெய் யென்பதாம்.

(வி-ரை.) சேமம்-காவல். சேமம்புகுதல் - காவல்காக்கச் செல்லுதல் (நாடுகாக்கச்செல்லுதல்). இது அரசற்குரிய தொழிலொன்றாதலால் இச்சூத்திரம் அரசனை நோக்கிற்று. யாமம் - சாமம், அது ஏழரைநாழிகையளவு கொண்டகாலம். அளவேனும் என்றது சொல்லெச்சமாய்க் குறைந்துநின்றது. இதனால், நீ விழித்திருந்து நாடுகாக்கச் சென்றவிடத்தும் சிறிதுநேரம் நித்திரைசெய்யவேண்டும், செய்யாவிடின் நோய்மேலிட்டு உன்னை வருத்துமென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மருந்து - க - ம் பாட்டு,

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று."

நோய்செய்யும் - துன்பஞ்செய்யும். நூலோர் - ஆயுர்வேதமுடையார். வளி - காற்று. மூன்று - வாதபித்த சிலேட்டுமங்கள்.

இச்சூத்திரத்திற்கு, காவற் கூடத்திலேபோய் ஒருவேலையுமில்லாதிருந்தாலும் ஏழரை நாழிகைக்குப் பின்னே நீ நித்திரைசெய்யென்று பொருள் கூறுவாருமுளர்.

34. சையெனத்திரிந்தா லையமிட்டுண்.

(ப-ரை.) சையெனத்திரிந்தால் - (மேன்மக்கள் சீயென்றருவருக்கும்படி திரியாதை) ஒருவேளை அப்படித்திரிந்து சீவனஞ்செய்தாலும், ஐயம் இட்டு - (அப்படிப்பட்ட சீவனத்திலும்) இரப்பவர்க்குப் பிச்சையிட்டே, உண் - நீ யுண்ணக்கடவை, எ-று.

(க-ரை.) நீ இழிவான சீவனஞ்செய்துகொண்டிருந்தாலும் அக்காலத்திலும் உன்னிடத்துவந் திரப்போர்க்குப் பிச்சையிட்டே நீயுண்ணவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) தேற்றேகாரமும், திரிந்தாலும் என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையும் விகாரத்தால் தொக்கு நின்றன. சை, சீ, என்பன இகழ்ச்சிக்குறிப்பு. ஐயமிட்டுண் என்றதனால் முன்னேயிரப்போர்க்குப் பிச்சையிட்டுப் பின்னே நீ யுண்ணவேண்டுமென்றதாயிற்று. அப்படிப்பட்ட காலத்திலும் நீ தனித்துண்ணலாகாது. தனித்துண்டல் இரத்தலினுந்தீது என்பதிதனாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஈகை - கூ - ம் பாட்டு,

"இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்."

இரத்தலின்-பிறரிடத்திற் சென்றிரப்பதைப் பார்க்கிலும், இன்னாது - தீது, மன்ற - ஒரு தலையாக, நிரப்பிய - பொருட் குறைநிரப்பவேண்டி, தமியர் உணல் - தனித்துண்டல். 'கையொத்திருந்தாலையமிட்டுண்' எனப் பாடமோதி, கைப்பொருளொத்திருந்தால் பிச்சையிட்டு நீயு முண்பாயாக என்று பொருளுரைத்தலுமாம். கை - திசைச்சொல், இதற்குக் கையென்பது பொருள். அது அதனிடத்துள்ளபொருளை யுணர்த்திற்று.

35. சோக்கரேன்பவர் அக்கம்பேறுவர்.

(ப-ரை.) சொக்கர் என்பவர் - (சோம்பலின்றி எல்லாமுயற்சிகளிலும்) அழகுடையவரென்று சொல்லப்பட்டவர், அக்கம்பெறுவர் - செல்வத்தைக் கைக்கொள்வர், எ-று.

(க-ரை.) சோம்பலின்றி முயற்சியாகிய அழகினையுடையவர் செல்வத்தைக் கைக்கொள்வர் என்பதாம்.

(வி-ரை.) சோம்பரென்பவர் எனப் பின்பு விதந்தோதுதலால், இவர் சோம்பலின்றி முயற்சியழகுடையவரென்பது பெறப்பட்டது. என்பவர்எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. ஆக்கம் அக்கம் எனத் தலையாகெதுகைநோக்கி விகாரப்பட்டது. இதனால், தளராமல் அரிய முயற்சிகளையுந் திருந்தச்செய்ய வல்லவர்க்கு, அம்முயற்சிகள் எளிதிற் செல்வத்தைக் கொடுக்குமென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஆள்வினையுடைமை - க-ம் பாட்டு,

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

அசாவாமை - தளராமை.

சொக்கரென்பவர் அத்தம்பெறுவர் என்றும் பாடம். இதற்கு, பொன்னுடையவரென்று சொல்லப்படுவோர் அறமும் இன்பமுமாகிய மற்றைப் புருஷார்த்தங்களையும் பெறுவார் என்பது பொருள். சொக்கு - பொன். அத்தம் அர்த்தம் என்னும் வடசொற்றிரிபு. அர்த்தம் - அர்த்திக்கப்படுவது, புருஷார்த்தம் புருஷனால் அர்த்திக்கப்படுவது.

36. சோம்பரேன்பவர் ஏம்பித்திரிவர்.

(ப-ரை.) சோம்பர் என்பவர் - (முயற்சியிலே) சோம்பலுடையவரென்று சொல்லப்பட்டவர். ஏம்பி - (வறுமையால்) மெலிந்து, திரிவர்-(வயிற்றின் பசியால்) வாழ்மனைதோறும் திரிந்தலைவர், எ-று.

(க-ரை.) முயற்சியிலே சோம்பலுடையவரென்று சொல்லப்பட்டவர் வறுமையால் மெலிந்து, வாழ்மனைதோறும் பசிதணித்தற்பொருட்டுப் பிச்சையேற்றுத் திரிவரென்பதாம்.

(வி-ரை.) சோம்பர் - மடியுடையோர், ஏம்புதல் - அங்கலாய்த்தலெனினுமாம். முயற்சி - ஊக்கம் (மனவெழுச்சி). வறுமை - தரித்திரம். மெலிதல் - இளைத்தல். வாழ்மனை - இல்வாழ்வார் வீடு. சோம்பரென்பவர் ஏம்பித்திரிவர் என்றமையால் சோம்பலின்றி முயற்சியோடு கூடியிருப்பவர் செல்வராய்க் களித்திருப்பரென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மடியின்மை - எ - ம் பாட்டு,

> " இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
> மாண்டவு ஞற்றி லவர். "

இடிபுரிந்து - இடித்துச்சொல்லி, எள்ளும் - இகழ்கின்ற, மடிபுரிந்து - சோம்பலை மேற்கொண்டு, மாண்ட - மாட்சிமைப்பட்ட, உஞற்று - முயற்சி, இலவர் - இல்லாதவர்.

"தேம்பித்திரிவர்", என்றும்பாடம். இதற்கு, வறுமையினால் வருந்தி இரந்துதிரிவார், என்பதுபொருள்.

37. தந்தைசொன்மிக்கோரு மந்திரமில்லை.

(ப-ரை.) தந்தை - பிதாவினது. சொல் - சொல்லினும், மிக்கு - மேற்பட்டு, ஒருமந்திரம் - (தியானஞ்செய்து உறுதியாகப் பற்றத்தகுந்த) ஒருமந்திரமும், இல்லை - (ஒருவனுக்கு எங்கும்) இல்லை, எ-று.

(க-ரை.) தகப்பனது சொல்லினும் மேற்பட்டவொரு மந்திரமும் ஒருவனுக்கு எங்குமில்லை யென்பதாம்.

(வி-ரை.) ஐந்தாவது உறழ்பொருளைத் தரும் இன்னுருபுடன் முதலிலே உயர்வு சிறப்பும்மையும், இறுதியிலே முற்றும்மையும் குறைந்துநின்றன. ஒருமந்திரமும் - ஒருமந்திரமாயினும், தன் றந்தையென்பது தந்தையென மரூஉவாயிற்று. மிக்கொரு என்பதை மிக்க ஒரு எனப்பிரித்து மேற்பட்டவொரு எனப்பொருள் கூறினுமாம். இப்பொருட்கு நிலைமொழி யீற்றகரம் விகாரத்தாற்றொக்கது. " புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை " என்புழிப்போல.

' தந்தைசொன்மிக்க மந்திரமில்லை ' என்றும் பாடம். மிக்கமேற்பட்ட.

38. தாயிற்சிறந்தோரு கோயிலுமில்லை.

(ப-ரை.) தாயின் - தன்னைப்பெற்றவளினும், சிறந்து - சிறந்ததாகி, ஒரு கோயிலுமில்லை - (அன்புசெய்து தொழத்தக்க, ஒருகோயிலும் ஒருவனுக்கு எங்குமில்லை, எ-று.

(க-ரை.) தன்னைப்பெற்ற தாயினும் சிறந்த கோயிலும் ஒருவனுக்கு எங்குமில்லை யென்பதாம்.

(வி-ரை.) சிறப்பு - உயர்வு. ஒரு - ஒப்பற்ற என்றுரைத்தலும் பொருந்தும். இதனுள் உயர்வு சிறப்பும்மை குறைந்துநின்றது. மிக்கு சிறந்து என்னும் செய்தெனெச்சங்கள் இல்லையென்னுங்குறிப்பு வினைகொண்டு முடிந்தன. இவ்வாறு சொல்லப்பட்டன வாயினும் ஆலயந்தொழுவது சாலவுநன்று என்றது இவர் கருத்தாதலால், தந்தைசொல்லைக் கடந்து தியானிக்கத்தக்க மந்திரமும், தாயைக்கடந்து தொழத்தக்க கோயிலும் இல்லையெனக் கொண்டு தந்தையானவன் இந்தமந்திரத்தைத் தியானஞ்செய்யாதை யெனிற் செய்தலும், தா

யைப்பூசியாமல் ஆலயந்தொழுதலும் கூடாதென்பது கருத்தெனக் காண்க. உணர்வைப்போற்றி வளர்ப்பவன் தந்தையாதலாலும், உயிரைப்போற்றி வளர்ப்பவள் தாயாதலாலும் இவ்வாறு கூறப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இல்வாழ்க்கை - ௩ - ம் பாட்டு,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்
ஐம்புலத்தா றோம்ப றலை."

இதனுள், தென்புலத்தாரைப் போற்றுதலும் அடங்கி நிற்றலால் திருவள்ளுவநாயனார்க்கும் இதுவே கருத்தெனக்காண்க. அப்படியானால் இச்சூத்திரமிரண்டும் மேலே யிந்த நூலின் முகத்திற் கூறிய இரண்டு சூத்திரங்களையுமே யொத்திருத்தலால் கூறியது கூறலென்னுங் குற்றமாமெனின் ஆகாவென்க. என்னை, அங்கே தாய்தந்தையரைத் தொழுதலின் தெய்வத்தைத் தொழுவது தருமமெனவும், இங்கே அவர் சொல்லையும் அவர்களையும் விலக்கி, மந்திரத்தியானங்களும் தேவதாராதனங்களும் செய்தல் அதருமமெனவும் கூறுதலாலென்க.

39. திரைகடலோடியுந் திரவியந்தேடு.

(ப-ரை) திரைகடல் ஓடியும் - (இலாபமுண்டா யிருப்ப தறிந்து) அலைகடலேறிச் சென்றாயினும், திரவியம் - பொருளை, தேடு - நீ சம்பாதி, எ-று.

(க-ரை.) இலாபமுண்டா யிருப்பதறிந்து கப்பலேறிச் சென்றாயினும் நீ பொருளைச் சம்பாதிக்கவேண்டு மென்பதாம்.

(வி-ரை.) திரைகடல் - அலையாநின்றகடல். அலைதல் - அசைதல். திரைகடல் - காற்றினாற் சுருட்டப்படுகின்ற கடல், ஓடியும் - என்றது கப்பலேறி விரைந்துசென்றும் என்றபடி. திரவியம் - பொருள். இது தநதாநியாதிக ளெல்லாவற்றையும் குறிக்கும். தேடுதல் - பலவிடங்களினுஞ் சென்று வருத்தப்பட்டீட்டுதல். இதனால், இவ்வாறு வருத்தப்பட்டுப் பொருளை யீட்டினால் எல்லாத் தருமங்களுஞ் செய்யலாம், எல்லாவின்பங்களையும் அநுபவிக்கலாம் என்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பொருள்செயல்வகை-௪-ம் பாட்டு

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்."

இது அரசனை நோக்கிற்று.

அறம் திறம் என்பன அறன் திறன் எனப் போலியாயின. ஈனும் - கொடுக்கும்.

திறம் - பொருளீட்டுதற்குரிய நெறி. இலதாக என்பது இன்றி யெனத் திரிந்து நின்றது. தீதின்றி யென்றது கொடுங்கோன் மை யிலதாக என்றபடி. தீது - கொடுங்கோன்மை. தீதின்றிவந்த பொருள் என்பதனால் செங்கோலனாயிருந் தீட்டிய பொருள் என் பது பெறப்பட்டது. இவ்வா றீட்டியபொருள் அறத்தையும் இன்பத் தையுங் கொடுக்கும் என்ப திதனாற்போந்த பொருள். 'திறனறிந்து தீதின்றி வந்தபொருள் அறனீனு மின்பமுமீனும்' என்றதனால், திற னறியாது தீதோடு கூடிவந்தபொருள் மறத்தையும் துன்பத்தையும் கொடுக்கும் என்பதும் விளங்கிற்று.

40. தீராக்கோவம் கேடாமுடியும்.

(ப-ரை.) தீரா - ஒழியாத, கோபம் - கோபமானது, கேடு ஆ - (பின்பு தனக்கும் தன் தவத்திற்கும்) கெடுதியாகவே, முடியும் - முடிவுபெறும், எ-று.

(க-ரை.) ஒழியாத கோபமானது பின்பு தனக்கும் தன் தவத் திற்கும் கெடுதியாகவே முடிவுபெறும் என்பதாம்.

(வி-ரை.) தீராக்கோபம் - "குணமென்னுங் குன்றேறி நின் றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்றபடியேசிறிதுநேரம் நின்று ஒழியாமல் நெடுங்காலம் நிலைபெற்றிருக்குங் கோபம். இது தவத்தானை நோக்கிற்றாதலால், அவனுக்கும் அவன் தவத்திற்கும் கெடுதியாய் முடிவுபெறுமென்று பொருள் கூறப்பட்டது. மேலே

'சினத்தைப்பேணிற்றவத்திற்கழகு' என்றதனையே இங்கும் வற்புறுத்திக்கூறினது யாதுக்கெனின், அங்குச் சினத்தைப்பேணுதல் தவத்தின் ஆக்கத்தைக் குறித்தற்காதலாலும், இங்குச் சினத்தை யொழியாதிருத்தல் தவத்தின் அழிவைக் குறித்தற் காதலாலும் என்க. கேடாகவென்பது கேடாவெனத் தொகுத்தலாயிற்று. கேடா முடியும் என்றதனால் முன்னே யின்பமா யிருப்பினு மிருக்கும் என்பதும் தோன்றுகின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வெகுளாமை - எ-ம் பாட்டு,

" சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

சினத்தை - கோபத்தை, பொருளென்று - தன் ஆற்றலுணர்த்துவதோர் குணமென்று. கேடு - கெடுதல். பிழையாதற்று - பிழையாத அற்று - தப்பாத அவ்வாறுபோல. இதில் பொருள் என்றது குணத்தை. "தீராக்கோபம்போராமுடியும்"என்றும் பாடம். இதற்கு நீங்காத கோபமானது சண்டையாய் முடிவுபெறும் என்பது பொருள்.

41. துடியிற்பெண்டிர் மடியினெருப்பு.

(ப-ரை.) துடி - அமரிக்கையில்லாத, இல்பெண்டிர் - மனையாட்டியை ஒருவன் கட்டிக்கொண்டது, மடியில் நெருப்பு - அவன் மடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டதுபோலும், எ-று.

(க-ரை.) அமரிக்கையில்லாத மனைவியை ஒருவன் கட்டிக்கொண்டது அவன் மடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டது போலும் என்பதாம்.

(வி-ரை.) துடி - முதனிலைத் தொழிற்பெயர்; துடித்தல் என்பது பொருள். துடித்தல் - பதைத்தல். துடியிற்பெண்டிர் என்பதற்குத் துடித்தலையுடைய இற்பெண்டி ரென்பது பொருளாதலால் அமரிக்கையில்லாத மனையாட்டியெனப் பொருள் கூறலாயிற்று.

இதனால் தீப்பெண்டிரை யொருவன் கட்டிக்கொள்வது தகா தென்பதும், கட்டிக்கொள்வனாயின் நெருப்பைத் தன் மடியில் கட்டிக்கொள்வதை நிகர்க்குமென்பதும் பெறப்பட்டன. உவமையினும் பொருளினும் கட்டிக்கொண்டதென்பது குறைந்து நின்றது. இது தொழிலுவமம்.

"துடியாப்பெண்டிர் மடியினெருப்பு" என்றும்பாடம், இதற்கு, தங்கணவருக்குத் துன்பம் வந்தபோது மனம் பதையாத பெண்கள் அவர் வயிற்றில் நெருப்புக்கு நிகராவர் என்பது பொருள்.

42. தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும்.

(ப-ரை.) தூற்றும் பெண்டிர் - (தன் கணவன் குற்றங்களைப்) பலரறியச் சொல்லிப் பரப்பிவைக்கும் மனையாட்டியை, கூற்று என த்தகும் - கொண்டானைக் கொல்லுதற் கமைந்த நமனென்று சொல்லத்தகும், எ-று.

(க-ரை.) தன் கணவன் குற்றங்களைப் பலரறியத் தூற்றும் மனைவியை, கொண்டவனைக் கொல்லுதற் கமைந்த யமனென்று சொல்லத்தகும் என்பதாம்.

(வி-ரை.) தூற்றுதல் - பலரறியச்சொல்லுதல். உடலையும் உயிரையும் வேறு பிரித்தலால் யமனுக்குக் கூற்று என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவ்விரண்டிடத்தும் பெண்டிர் என்றது தொண்டனார் வந்தார் என்றாற்போலக் கோபத்திலே ஒருமைப்பால்பன்மைப் பாலாய்நின்ற பால்வழுவமைதி. இப்படிப்பட்ட மனையாட்டியரைக் கொண்டவர் எவ்வளவு பெருஞ்செல்வ முடையவராயினும் அதனையிழந்து பலராலும் பழிக்கப்பட்டு நாணித் துன்புறுவரென்பது இவ்விரண்டு சூத்திரங்களின் பொருளாமென்பதுணர்க.

இவற்றிற்கு உதாரணம்-முறையே, திருக்குறள் - வாழ்க்கைத்துணை நலம் - உ - ம் பாட்டும், ௯ - ம் பாட்டும்,

" மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை

யெனைமாட்சித் தாயினு மில்."

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை."

மனைமாட்சி - இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகள். இல்லாள்கண் - இல்லாளிடத்தில், இல் ஆயின் - இல்லையாயின், எனை மாட்சித்து ஆயினும் - செல்வத்தால் எவ்வளவு சிறந்ததாயினும், இல் - அதனை யுடைத்தன்று.

புரிந்த - விரும்பின, இல் - மனைவி. புரிந்த இல் என்பது புரிந்தில் என நிலைமொழி யீற்றகரம் தொகுத்தலாயிற்று. ஏறு - ஆண் சிங்கம். பீடு - பெருமிதம். இகழ்வார் - பகைவர்.

43. தெய்வஞ்சீறிற் கைதவமாளும்.

(ப-ரை.) தெய்வம் சீறின் - (கடவுள் நெறிதப்புதலாலே) தெய்வமானது உன்னைக் கோவிக்குமாயின், கை தவம் - அதற்கு முன்னே செய்து உன் கைவசப்பட்டிருந்த தவப்பயனும், மாளும் - அப்போதே யழிந்துபோம், எ-று.

(க-ரை) நீ கடவுள்நெறி பிழைத்தால் நீ செய்த தவப்பயனும் உடனே யழிந்துபோம் என்பதாம்.

(வி-ரை.) சீறுதல் - கோவித்தல். கைத்தவம் கைதவம் என எதுகை நோக்கி விகாரமாயிற்று. தவம் - ஆகுபெயர். ஆதலால் அப்படி வெகுளாமலே அக்கடவுள் நெறியிலே நின்றால் நீட்டித்துவாழ்வா யென்றதாயிற்று.

இதற்குதாரணம் :—திருக்குறள்-கடவுள்வாழ்த்து - சு - ம் பாட்டு.

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்."

பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளை, வாயில் - வழியாகவுடைய ஐந்து - ஐந்தவாவினையும், அறுத்

தான் - அறுத்தவனாகிய கடவுளது, பொய் தீர் - பொய்யொழிந்த (மெய்யான), ஒழுக்கநெறிநின்றார்-ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றவர், நீடு வாழ்வார் - பிறப்பின்றி யெக்காலத்தும் ஒருதன்மை யராய்வாழ்வார். ஐந்தவா-சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய விடயங் களைந்தன்மேற் செல்லுமாசை. பொய்தீரொழுக்கம்-மெய்யொழுக் கம். அது கடவுள் நெறியாகிய முத்திநெறியி லொழுகு மொழுக் கம். நீடுவாழ்தல் - எக்காலத்தும் அழிவின்றி யொருதன்மையாய் வாழ்தல்.

44. தேடாதழிக்கிற் கேடாமுடியும்.

(ப-ரை.) தேடாது - (மேன்மேலும் பொருளைத்) தேடாமல் அழிக்கின் - உன் கையில் உள்ள பொருளையே செலவு செய்வையா யின், கேடா முடியும் - அது உனக்குக் கேடாகவே முடிவுபெறும், எ-று.

(க-ரை.) மேன்மேலும் பொருளைச் சம்பாதிக்காமல்; உன்கையி லுள்ள பொருளையே செலவழிப்பையாயின், அது பின்பு உனக்குக் கேடாகவே முடியும் என்பதாம்.

(வி-ரை.) கேடாகவே யென்பது கேடாவெனக் குறைந்து நின்றது. தேடாது என்றது பலவகையானும் முயன்று தேடாமல் என்றபடி. பலவகையாவன-உழவு, வாணிகம் முதலியன.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வலியறிதல் - அ - ம் பாட்டு,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை."

ஆகாறு - பொருள் வரும்வழி (ஆதாயம்). போகாறு - அது போகும்வழி (செலவு). இட்டிது - சிறிது. அகலாக்கடை - பெரு காதாயின், வரவுஞ் செலவும் தம்முளொப்பினுங் கேடில்லை யென் பது இக்குறளின் கருத்து.

"தேடாதழிக்கிற் பாடாமுடியும்" என்றும் பாடம். இதற்கு, ஒருவன் வருந்திச் சம்பாதியாமல் இருக்கிறபொருளைச் செலவழித்

தால் அது அவனுக்கு, பின்பு வருத்தமாக முடியும் என்பதுபொருள்.

45. தையுமாசியு மையகத்துறங்கு.

(ப-ரை.) தையும் மாசியும் - (மார்கழி தை மாசி பங்குனி இந்த நான்கு மாசங்களும் பனிக்காலமாயினும், இவற்றுள் மார்கழி முன்பனித்தொடக்கமும் பங்குனி பின்பனி முடிவுமா மாதலால் இடைநின்ற) தை மாசி இரண்டு மாசங்களும் (மிக்ககுளிர் பனிக்கால மாதலால்), மை அகத்து - (இடைவெளி தோன்றாமல்) இருண்ட அறையில், உறங்கு - (நீ படுத்து) நித்திரைசெய், எ-று.

(க-ரை.) தை மாசி யென்னும் இரண்டு மாசமும் மிக்க குளிர் பனிக்கால மாதலால் அவ்விரண்டு மாசமும் இருட்டறையிற் படுத்து நீ நித்திரைசெய் யென்பதாம்.

(வி-ரை.) இசை யெச்சங்கள் வருவித்துரைக்கப்பட்டன. இடைவெளி தோன்றின் பனி அவ்வழியே நுழைந்து நித்திரையைக் கெடுத்துப் பின்புநோயையுமுண்டாக்கு மாதலால், மையகத்து என்பதற்கு இடைவெளி தோன்றாம விருண்ட அறையிலெனப் பொருளுரைக்கப்பட்டது. மைத்தல்-இருட்டுதல். மை-பகுதி; அகம்-வீடு, இது இதன் சினையாகிய அறையை யுணர்த்தலால் முதலாகு பெயர்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மருந்து-௧ - ம் பாட்டு,

“ மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.”

மிகினும் குறையினும்-(உணவு செயல் துயில் என்பவை) ஒருவனது பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனின்) மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் - ஆயுர்வேசமுடையோரால், வளிமுதலா எண்ணிய - வாத முதலாக எண்ணப்பட்ட, மூன்றும்-மூன்றும், நோய் செய்யும் - அவனுக்குத் துன்பஞ் செய்யும். உணவு செயல் துயில் என்பவை அளவின் மேற்படின் துன்பஞ் செய்யுமென்ப திதனாற்போந்த பொருள். உணவொத்தலாவது -

சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயலொத்த லாவது - மன்மொழி மெய்களால் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே யொழிதல். துயிலொத்தலாவது - துயிலவேண்டு மளவாகிய இடையிரண்டு சாமமுறங்கல். "தையுமாசியும் வையகத்துறங்கு" என்றும் பாடம். இதற்கு, தை மாதத்திலும் மாசிமாதத்திலும் (பனிவருத்தாத) வைக்கோல் வீட்டிலே நீங்கித்திரை செய்யென்பது பொருள்.

46. தொழுதூண்சுவையி னுழுதூணினிது.

(ப-ரை.) தொழுது - ஒருவரைச்சேவித்து (அதனாலே), ஊண் - உண்ணுமுணவின், சுவையின் - சுவையினும், உழுது - (அதுசெய்யாமல், நிலத்தை) உழுதுபயிரிட்டு, (அதினாலே) ஊண் - உண்ணுமுணவின் சுவை, இனிது - இனியதாகும், எ-று.

(க-ரை.) ஒருவரைத் தொழுதுண்ணு முணவின் சுவையினும் நிலத்தை யுழுதுண்ணு முணவின் சுவை யினிதாகு மென்பதாம்.

(வி-ரை.) உழுதூண் என்றதில் ஊண் ஆகுபெயர், அது அதன் சுவையைக் குறித்தலாலென்க. சுவையென்பதை தொழுதூண் உழுதூண் இரண்டோடுஞ் சேர்த்துரைத்துக் கொள்ளலுமாம். சுவை - இரதம். (ரசம், ருசி) அச்சுவையினும் இச்சுவை யினிதென்றதுஒருவரைச் சேவித்துப் பின்செல்லவேண்டாது தாமே யுழுதுண்டு வாழுஞ் சிறப்புநோக்கி யென்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ௩ - ம் பாட்டு,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

உழுதுண்டு வாழ்வார் தமக்குரியர், தொழுதுண்டு பின்செல்பவர் பிறர்க்குரியர் என்பதிதன்கருத்து. எல்லாம் - எல்லாரும். உழுதுண்டுவாழ்வார் தமக்குரியராதலாவது - யாவரு முண்ணும் வகை உழுதலைச்செய்து அதனாற் றாமுமுண்டு தமக்குரியராய் வாழ்தல். தொழுதுண்டு பின்செல்பவர் பிறர்க்குரியராதலாவது - தாமும் மக்கட்பிறப்பினராய் வைத்துப் பிறரைத்தொழுது அவர் பின்சென்று

அவர் சில கொடுப்ப அதனால் தம்முயிரோம்பி அவர்க் குரியராய் வாழ்தல்.

47. தோழனோடும் ஏழைமைபேசேல்.

(ப-ரை.) தோழனோடும் - உன் சிநேகனோடாயினும், ஏழைமை பேசேல் - உன்வறுமைத் தன்மையைச்சொல்லாதை, எ-று.

(க-ரை.) உன் சிநேகனோடாயினும் உன் வறுமைத் தன்மையைச் சொல்லலாகா தென்பதாம்.

(வி-ரை.) தோழனோடு மேழைமைபேசேல் என்றதனால் ஏனையரோடு பேசலாகாதென்பது தானே வெளியாயிற்று. தோழனோடு சொன்னாலும் அவனும் உன்னை அயலான்போலவே யெண்ணிக் கைவிடுவானென்ப திதனாற்போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நல்குரவு - எ - ம் பாட்டு,

" அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். "

அறம் சாரா - அறத்தோடியைபில்லாத, நல்குரவு - நல்குரவுடையான், ஈன்ற தாயானும் - (தன்னைப்)பெற்றதாயினாலும், பிறன் போல - பிறனைக் கருதுமாறுபோலக் கருதி, நோக்கப்படும் - நோக்கப்படுவான். நல்குரவு - ஆகுபெயர். நல்குரவு - வறுமை. ஈன்ற தாயானும் என்பதிற் சிறப்பும்மை அளைதியற்கை யன்புடைமை விளக்கிநின்றது. ஈன்றதாயானும் பிறன்போல நோக்கப்படும்என்றதனால் ஏனையோரால் எவ்வாறு நோக்கப்படுவனென்பதை உய்த்துணர்க.

48. நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்.

(ப-ரை.) நல் இணக்கம் அல்லது - (வினைவேறு சொல்வேறாகிய) தீயசிநேகமானது, அல்லல் படுத்தும் - (உன்னைக் கஷ்டவினும்) துன்பப்படுத்தும், எ-று.

(க-ரை.) தீநட்பானது கனவினுந் துன்பப்படுத்தும் என்பதாம்.

(வி-ரை.) இணக்கம் - நட்பு. நல்லிணக்கமல்லது - நல்லிணக்கமல்லாதது, அல்லற்படுத்தல் - துன்பத்துட்புகுத்தல். கனவினும் என்றது சொல்லெச்சம். இதனல் நனவுகனவுகளாகிய இரண்டவஸ்த்தைகளினும் துயர்செய்யு மென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - தீநட்பு - கூ - ம் பாட்டு,

"கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு."

இன்னாது - தீயது. தொடர்பு - நட்பு.

49. நாடொன்றும்வாழக் கேடொன்றுமில்லை.

(ப-ரை.) நாடு ஒன்றும்-(அவனாள்கின்ற) தேசமொன்றும், வாழ - வாழ்ந்திருக்குமாயின், கேடு ஒன்றும் இல்லை - அவனுக்கு வரக்கடவதாகிய கேடு ஒன்றுமில்லை, எ-று.

(க-ரை.) நாடொன்று மாத்திரம் வாழ்ந்திருக்குமாயின் அதனையாளுகின்ற அரசனுக்கு யாதொரு குறையுமில்லை யென்பதாம்.

(வி-ரை.) நாடு சினையாகுபெயராய் உலகத்தை யுணர்த்திற்று. இது அரசனை நோக்கிற்று. வாழ - செயின் என்னு மெச்சத்திரிபு. ஒன்றும் - சிறிதும் என்றுரைப்பினும் பொருந்தும்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - செங்கோன்மை - எ - ம் பாட்டு,

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

இறை - அரசன். முறை - செங்கோல். முட்டாச்செயின்-முட்டாமற் செலுத்துவானாயின். முட்டாமற் செலுத்தினவாறு மகனை முறைசெய்தான் கண்ணும், தன்கைகுறைத்தான்கண்ணுங் காண்க. முட்டாது என்பதன் இறுதிநிலை விகாரத்தாற் றொக்கது.

"நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை" என்றும்பாடம். இது

ற்கு, தேசமெங்குஞ்செழித்திருக்குமாயின் திருட்டுமுதலாகிய கெடுதிகள் ஒன்றுமில்லை யென்பது பொருள்.

50. நிற்கக்கற்ற சொற்றிறம்பாமை.

(ப-ரை.) கற்ற - (நீ கசடறக்) கற்ற மேலான நூல்களிலே, சொல் - (சொன்ன) சொல்லுக்கு, திறம்பாமை - மாறுபடாமல், நிற்க - (அதற்குத்தக) நிற்பாயாக, எ-று.

(க-ரை.) நீ கற்ற நூல்களிலே சொல்லப்பட்ட நல்லொழுக்க வழியிலே நிற்பாயாக என்பதாம்.

(வி-ரை.) கற்ற என்பது அஃறிணைப் படர்க்கைப்பன்மை யிறந்தகால வினையாலணையும்பெய ராதலால் நூல்களெனக் காண்க. கற்ற என்றவிடத்து அற்றுச்சாரியையும் இல்லுருபும் சொன்னஎன்னுஞ்சொல்லை விசேடித்த பெயரெச்சமும் தொக்குநின்றன. கசடறக்கற்கவேண்டியவற்றைக் கற்றுப் பின்பு அதற்குத் தகநின்றொழுகாவிடிற் பயனில்லையாதலால், 'சொற்றிறம்பாமை நிற்க' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கல்வி - க - ம் பாட்டு,

“ கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. ”

கற்பவை - கற்கப்படும் நூல்கள். நிற்க -(அவைசொல்லும் நெறிக்கண்ணே) நிற்க. கற்பவையென்றதனால், அறம்பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொரு ளுணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினர்க்குஆகாவென்பது பெறப்பட்டது. கசடறக் கற்றலாவது-விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது - இல்வாழ்வுழி, “ கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்-தருமமுந் தக்கார்க்கே செய்தலினும், துறந்துழித்தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும்வழுவாமை, சிறப்புடைமகற்குக்கற்றல் வேண்டுமென்பதும், அவனாற் கற்கப்படும் நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனாற் பயனும் இதனாற் கூறப்பட்டது.

51. நீரகம்பொருந்திய வூரகத்திரு.

(ப-ரை.) நீரகம்-(மலையையும் மலையினின்று வருகிற நீர்களாகிய ஆறுகளையும் கீழ்நீர் மேல்நீர்களைக் கொண்டிருக்கிற துரவு கேணி ஏரி முதலிய) ஆதாரங்களையும், பொருந்திய - கொண்டிருந்த, ஊர்அகத்து - (அரண்சூழ்ந்த) ஊரிடத்தில், இரு - நீ குடியிருந்து வாழ், எ-று.

(க-ரை.) ஆறு துரவு கேணி ஏரி முதலிய சலாதாரங்களும் அரணும் உள்ளவூரிலே நீ குடியிருந்து வாழ்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) நீர்அகம் - நீரைத் தனக்குள்ளே கொண்டிருக்கிற, இது ஆகுபெயராய் மலையையும் நதிகளையும் மற்ற ஆதாரங்களையும் உணர்த்திற்று. ஊர்எனவே அரண் சூழ்ந்தவூர் என்றது குறிப்பெச்சம். குடியிருந்தால் காப்புடைத்தாகி வானம் வறப்பினும் வளந்தருமென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நாடு - எ - ம் பாட்டு.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு."

இருபுனல் - கீழ்நீர்மேனீர் என்னுமிரண்டுநீர். கீழ்நீர் - ஊற்றுநீர். மேல்நீர். மழைநீர். இடையதன்றி யொருபுடைய தாகலும், தன்வளந்தருதலும், மாரிக்கணுண்ட நீரைக் கோடைக்கண் உமிழ்தலும் உடைமைபற்றி "வாய்ந்தமலை" என்றார்.

52. நுண்ணியகருமமும் எண்ணித்துணி.

(ப-ரை.) நுண்ணிய - நுட்பமாகிய உபாயங்களையும், கருமம்- (அவற்றாற் செய்யத்தக்க) காரியத்தையும், எண்ணி - (குற்றமற) ஆராய்ந்து, துணி - பின்பு நீ செய்யத்துணி, எ-று.

(க-ரை.) நுட்பமான வுபாயங்களையும் அவற்றாற் செய்யத்தகுந்தகாரியத்தையும் குற்றமற ஆராய்ந்து பின்பு நீ செய்யத் துணிவா

யாக வென்பதாம்.

(வி-ரை., நுண்ணிய என்பது குறிப்புவினையாலணையும் பெய ராதலால இங்கே சாமம் தானம் பேதம் தண்டம் என்னும்நால்வகை யுபாயங்களின் மேல்நின்றது. எண்ணுதல் - ஆலோசித்தலுமாம். துணிதல் - நிச்சயித்தல் துணிந்தபின் எண்ணலா மென்பது குற்ற மென்பதிதனாற் பெறப்பட்ட பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-தெரிந்து செயல்வகை-எ-ம் பாட்டு,

“ எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு. ”

கருமம் - காரியம், எண்ணி - முடிக்கு முபாயத்தை யாலோசி த்து. இழுக்கு - குற்றம். உபாயம் என்பது அவாய் நிலையான் வந் தது, இது கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறு த்தல் என நால்வகைப்படும். இவற்றை வடநூலார், முறையே, தா னம், சாமம், பேதம், தண்டம் என்பர்.

53. நூல்பலவுணர்ந்தோர் சீரைத்தேடு.

(ப-ரை.) பலநூல் உணர்ந்தோர் - பலநூல்களையும் ஆராய்ந் தறிந்தோருடைய, சீரை - புகழை புகழுடையசார்பை), தேடு - நீ நாடு (நாடிக்கொள்), எ-று.

(க-ரை.) பலநூல்களையும் ஆராய்ந்தறிந்தோருடைய புகழோ டு கூடிய சார்பை நீ தேடிக்கொள்வாயாக வென்பதாம்.

(வி-ரை.) நூல் என்றது அறிவுநூலை. உணர்ந்தோர் என்றது நூற்பொருளையுள்ளவாறு ஐயந்திரிபறவுணர்ந்த அறிஞரை. சீர் - புகழ். அதுபுகழோடு கூடிய சார்பை யுணர்த்தலால் ஆகுபெயர். அவ ரது சார்பு எளிதிற் கிடைப்பதன்றென்பார், 'தேடு என்றார்' தேடிக் கொள்வையாயின் உன்பேதைமை நீங்குமென்ப திதன் பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பெரியாரைத்துணைக்கோடல்-க-ம் பாட்டு,

" அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். "

மூத்த - தன்னினுஞ்சிறந்த, கேண்மை - நட்பு. மூத்தலாவது- அறிவாலும், ஒழுக்கத்தாலும், காலத்தாலும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலையுடையார். திறனறிதலாவது-நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வழிநிற்றல் என்பன முதலாக அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல்.

" நான்முறைதெரிந்து சீலத்தொழுகு" என்றும்பாடம். இதற்கு தருமநூலிலே சொல்லப்பட்ட விதிமுறையை அறிந்து நன்னெறியிலே நீட என்பதுபொருள்.

54. நெஞ்சையொளித்தோரு வஞ்சகமில்லை.

(ப-ரை.) நெஞ்சை ஒளித்து - உன்மனத்துக்குத் தெரியாமல் நீமறைத்துவைத்த, ஒரு வஞ்சகம் இல்லை - ஒருபொய்யில்லை, ஆதலால் அந்தநெஞ்சறிந்த தொன்றை மறைத்துவைத்துப் பொய்சொல்லாதை; சொன்னால் அது பொய்த்துப்போம், போனால், அந்த நெஞ்சே உன்னைச்சுடும், எ-று.

(க-ரை.) உன்மனமறிந்த வொன்றை மறைத்துவைத்துப் பொய்சொல்லாதை, சொன்னால் அந்தநெஞ்சேஉன்னைச்சுடும்என்பதாம்

(வி-ரை.) ஒளித்த என்பது ஒளித் என அகரம் குறைந்து நின்றது. நெஞ்சை யொளித்து என்றது தௌவையைக் காட்டி விடும் என்றாற்போல உருபுமயக்கம். நெஞ்சு - மார்பு. அது அதனுள்ளிருக்கும் மனத்தை யுணர்த்தலால் இடவாகுபெயர். காரணமும்இசையெச்சமும் வேண்டியே நிற்றலின் அவைவருவித்துரைக்கப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வாய்மை - ௩ - ம் பாட்டு,

" தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். "

பொய்யற்க - மறையற்க.

55. நேராநோன்பு சீராகாது.

(ப-ரை.) நேரா - (புறத்தாலுடன்பட்டு) அகத்தாலுடன்படாத, நோன்பு - தவமானது (தவவேடமானது), சீர் ஆகாது - புகழாகாது (பழியாகும்), எ-று.

(க-ரை.) புறத்தாலுடன்பட்டு அகத்தாலுடன்படாத் தவவேடமானது புகழாகாது, பழியாகும் என்பதாம்.

(வி-ரை.) அகத்தால் என்றது சொல்லெச்சம். அகத்தாலுடன் படாத எனவே நோன்பென்றது தவவேடமென்பது பெறப்பட்டது. அகம் - மனம், நேர்தல் - மனத்தா லுடன்பட வென்பதை "நேராநிரந்தவர் நட்பு" என்பதனாலுமறிக. அகத்தாலுடன்படாது புறத்தாலுடன்படுதலாவது-பிறரை வஞ்சித்துக் காம வின்பங்களை யநுபவித்தற்பொருட்டு உள்வலியின்றி வலியுடையார் கொண்டதவ வேடத்தைக் கூத்தாடிகள்போல ஒருவன் மேற்கொள்வதும், அவ்வாறு மிக்கதவத்தோர் வேடத்துள்ளே மறைந்துநின்று பிறரைவஞ்சித்துக் காமவின்பங்களையநுபவிப்பதும், பசுவானதுபுலித்தோலைப் போர்த்துக்கொண்டு பயிரைமேய்தல்போலவும், வேடன் செடியுள் மறைந்திருந்து பறவைகளைப் பிடித்தல்போலவும் இழிவுறு மென்பதினாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-கூடாவொழுக்கம்-௩-ம் பாட்டும், ௪-ம் பாட்டும்,

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று."

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

பெற்றம் - பசு. தவம் - தவவேடம். அல்லவைசெய்தல் - தவமல்லவற்றைச் செய்தல். புதல் - புதர். வேட்டுவன் - வேடன். புள் பறவை. சிமிழ்த்தற்று - பிணித்தாற்போலும்.

56. நையவரினும் நொய்யவுரையேல்.

(ப-ரை.) நையவரினும் - நீவருந்தத் தகுந்த துன்பங்களே வந்துநேரிடினும், நொய்ய - (பெரும்பயனில்லாத) அற்பவார்த்தைகளை உரையேல், நீ சொல்லாதை. எ-று.

(க-ரை.) நீ வருந்தத்தகுந்த துன்பங்கள் நேரிட்டாலும் அவற்றை நீக்கிக்கொள்ளும்பொருட்டுப் பெரும்பயனில்லாத அற்பவார்த்தைகளை நீ சொல்லாதை யென்பதாம்.

(வி-ரை.) நொய் - அற்பம். நொய்ய என்றது குறிப்புவினையாலணைந்த அஃறிணைப் பன்மைப் பெயராதலால் இங்கே சொல்லின் மேனின்றது. வரினும் என்றசனால் துன்பங்கள் என்றது தோன்றா எழுவாயாய் நின்றது, அரியனவாகிய பொருளாராய்ச்சியை விரும்பினவனுக்கு நொய்யவுரைத்தல் குற்றமென்றதாயிற்று.
இதற்குதாரணம்:—திருக்குறள்-பயனிலசொல்லாமை - அ-ம் பாட்டு,

“ அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். ”

அரும்பயன்-அறிதற்கரியபயன்கள். அவை வீடுபேறும் மேற்கதிச்செலவும் முதலாயின, பெரும்பயனில்லாத என்றதனால் சிறுபயனுடையனவும் ஒழிக்கற்பாற்றென்பது பெறப்பட்டது.

'நைபவரெனினும் நொய்யவுரையேல்' என்றும்பாடம். இதற்கு, கேட்போர் எதிர்பேசாமல் வருந்துவோராயினும் அற்பமான சொற்களை நீ சொல்லாதை யென்பது பொருள்.

57. நொய்யோரேன்பவர் வெய்யோராவர்.

(ப-ரை.) நொய்யோர் என்பவர் - உருவிலே சிறியரென்று சொல்லப்பட்டவர், வெய்யோர் ஆவர் - (செய்கையிலே யாவரும்) விரும்புதற்குரியவருமாவர் (ஆதலால் உருவுகண்டு, இகழலாகாது,) எ-று.

(க-ரை.) உருவிலே சிறியவரா யிருப்பவரும் செய்கையிலே யாவரும் விரும்புதற்குரியருமாவர் ஆதலால் உருவுகண் டிகழலாகா தென்பதாம்.

(வி-ரை.) நொய்யோர் நொய்ம்மை யென்னும் பண்படியாகப் பிறந்தபெயர். வெய்யோரும் என்னும் ஆக்கவும்மை விகாரத்தாற் றொக்கது. வெய்யோர் - விரும்புதற் குரியவர். வெம்மை - விருப்பம். உருவிலே செய்கையிலே என்பன குறிப்பெச்சம். பெரிதாகிய தேரில் பாரத்தைக்கொண்டு செலுத்துகிற சிறிய அச்சாணி போலவே சிறியராயினும் பெரிய காரியங்களைக் கொண்டு செலுத்துவோருமுளர். அவரை வடிவுநோக்கி யிகழாமல் செய்கைநோக்கித் தேர்ந்துகொள்கவென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வினைத்திட்பம் - எ - ம் பாட்டு,

“உருவுகண் டெள்ளாமை வேண்டுமுருள் பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.”

உருவு - வடிவின்சிறுமை, எள்ளாமை - இகழாமை. ஆணி - உருள் கழவாது அதன்கடையிற் செருகுமாணி. அச்சு - உருள்கோத்த மரம். உடைத்து என்னும் வினைக்கு வினைமுதலாகிய உலகம்வருவித்துரைத்துக்கொள்க.

“நொய்பவரென்பவர் வெய்யவராவர்” என்றும்பாடம். இதற்கு உருவத்தினாலே சிறியவரென்று இகழப்படுவோரும் செய்கின்றகாரியத்தினால் யாவரும் விரும்புங் குணத்தையுடையவராவர் என்பது பொருள்.

58. நோன்பென்பதுவே கொன்றுதின்னாமை.

(ப-ரை.) நோன்பு என்பதுவே - தவம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, கொன்றுதின்னாமை - ஒருயிரைக்கொன்று அந்தவுயிர்நின்றவூனை உண்ணாதிருப்பதே. (அது ஆயிரம் வேள்விசெய்தலினும் நன்றாமாதலால்), எ-று.

(க-ரை.) ஒருயிரைக்கொன்று அதன்மாமிசத்தை யுண்ணாதிருப்பது ஆயிரம் யாகபலனைக் காட்டிலும் சிறந்ததாதலால் அதுவே தவமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது என்பதாம்.

(வி-ரை.) ஏகாரத்தைப் பிரித்து ஈற்றிற்கூட்டுக. காரணம்வேண்டியேநிற்றலால் வருவிக்கப்பட்டது. நோன்பு - நோற்றல். தின்னாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புலான்மறுத்தல்-௬-ம் பாட்டு,

“ அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. ”

அவி சொரிந்து-நெய்முதலிய அவிகளைப்பெய்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றன் - ஒருவிலங்கினது, உயிர் செகுத்து-உயிரைப்போக்கி, உண்ணாமை - (அது நின்ற உடம்பை) உண்ணாமை, நன்று - நன்மையாகும். ஆயிரம் யாகபலத்தினும் ஒருயிரை வதைத்து அதன் தசையை யுண்ணாமை மேற்பட்ட பலத்தைத் தரும் என்பது இக்குறளின்கருத்து. அன்றியும்,

திருக்குறள்:—தவம் - க - ம் பாட்டு,

“ உற்றநோய் நோன்ற லுயிக்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. ”

என்பதும் இதற்குதாரணமாகக் கொள்ளலாம்.

நோன்றல் - பொறுத்தல். உறுகண் செய்யாமை - துன்பஞ்செய்யாமை. தவத்திற்கு உரு - தவத்திற்கு வடிவு. உற்றநோய்-உண்டிசுருக்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்கள்.

59. பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்.

(ப-ரை.) பண்ணிய - (ஒருவன்) செய்த, பயிரில் - பயிரினிடத்தில், புண்ணியம் - (அவன் விருந்தினரை யுண்பித்து அவர் மிச்சிலைத்தானுண்ட) தருமத்தின்பயன், தெரியும் - தோன்றும், எ-று.

(க-ரை.) ஒருவன் செய்த பயிரினிடத்தில் அவன் விருந்தோம்பலாகிய தருமத்தின்பயன் தோன்றும் என்பதாம்.

(வி-ரை.) புண்ணியம் - ஆகுபெயர். அது தோன்றுதலாவது - அவன் பயிர்நிலம் வித்தில்லாமலும் விளைதல்போல்வது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - விருந்தோம்பல் - ரு - ம் பாட்டு,

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்."

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ - விதையும் விதைத்தல் வேண்டுமோ, விருந்து ஓம்பி - விருந்தினரை முன்னே உண்பித்து, மிச்சில் - மிகுந்திருப்பதை, மிசைவான் - பின்னே உண்பவனது, புலம் - விளைபுலம் (வயல்). கொல் - அசை. வித்துமிடல்வேண்டுங் கொல்லோ என்றதனால் தானே விளையும் என்பது பெறப்பட்டது. ஓகாரம் எதிர்மறையாய் வித்திடல் வேண்டாமையைக் குறித்தது. விருந்து - பண்பாகுபெயர்.

இச்சூத்திரத்திற்கு, ஒருவன் செய்த பயிரின் விளைவினாலும் விளைவில்லாமையினாலும், அவனிடத்தே புண்ணிய மிருத்தலும் இல்லாமையும் அறியப்படும் எனப்பொருள் கூறலுமுண்டு.

60. பாலோடாயினும் காலமறிந்துண்.

(ப-ரை.) பாலோடு ஆயினும்-(நீ யுண்பது நற்குணமுள்ள) பாலோடுகூடின உணவேயாயினும், காலம் அறிந்து - (முன்னுண்டது சீர்ணமான) சமயந்தெரிந்து, உண் - (பின்பு அவ்வுணவை அளவறிந்து) உண்பாயாக, எ - று.

(க-ரை.) உன்னாலுண்ணப்படுவது பாலோடு சேர்ந்த வுணவேயாயினும் அதையும் முன்னுண்டதற்றதென்பது தெரிந்து பின்பு அளவறிந் துண்ணக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) பாலோடு என்பதில் ஒடுவுருபின் உடனிகழ்ச்சிப் பொருளாக அவ்வினை முதலும் தொக்குநின்றன. காலம் - உண்டற்

குரிய சமயம். இப்படியுண்பது உடம்பை நோய்க்கிடனாக்காமல் நெடுங்காலம் வைத்திருத்தற்குரிய நெறியென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மருந்து - ௩ - ம் பாட்டு,

“ அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. ”

அற்றால் - (முன்னுண்டது) அற்றால் (சீர்ணித்தால்), அளவு அறிந்து - (பின்னுண்பதனை) அறுமளவறிந்து, உண்க - (அவ்வளவிற்றாக) உண்க, அஃது - அது, உடம்பு பெற்றான் - (இறப்பவும் பலவாய பிறயாக்கைகளிற் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுட) யாக்கையைப் பெற்றவன், நெடிது உய்க்கும்ஆறு - (அதனை) நெடுங்காலங்கொண்டு செலுத்தும்நெறி. அது என்றது அவ்வாறுண்டலை. இம்மைமறுமை வீடுபேறுகளெய்தற்பாலது ஈதொன்றுமே யாகலின் ‘உடம்புபெற்றான்’ என்றும், அதுநெடிது நின்றுழி அவை பெருகச்செய்து கொள்ளலாமாகலின் ‘நெடிதுய்க்குமாறு’ என்றும் கூறினார்.

61. பிழையதுபொறுக்கிற் பெரியோராவர்.

(ப-ரை.) பிழையது பொறுக்கின்-(அறிவிலார்) இகழ்ந்துசொல்வதை உட்கொள்ளாமல் பொறுப்பாராயின், பெரியோர் ஆவர் - (தவஞ்செய்வோரினும்) பெரியவராவர், எ-று.

(க-ரை.) அறிவிலார் இகழ்ந்துசொல்வதைப்பொறுப்பவர், தவஞ்செய்வோரினும் மேலோராவர் என்பதாம்.

(வி-ரை.) பிழையென்றதற்கேற்ப அது செய்தற்குரிய அறிவிலார் என்பது வருவிக்கப்பட்டது. பொறுக்கின் என்றது பொறுத்தலருமை தோன்றநின்றது. தவத்தினுக்குப் பொறையுடைமைசிறந்ததாகலால், பெரியோராவர் எனவே தவஞ்செய்வோரினும் என்பது பெறப்பட்டது. பிழையது என்பதில் துபகுதிப்பொருள்விகுதி. அகரம்-சாரியை. இங்கே பிழையென்றது இகழ்ந்துரையை. அத்தவஞ்செய்தலினும் இப்பொறையுடைமை சிறந்ததென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பொறையுடைமை-௧௦-ம் பாட்டு,

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொன் னோற்பாரிற் பின்."

உண்ணாது - (விரதங்களால்) ஊணைத் தவிர்ந்து, நோற்பார் - (உற்றநோயைப்) பொறுப்பார், பெரியர் - (எல்லாரினும்) பெரியர்; (அவர் பெரியராவது) பிறர் சொல்லும்-(தம்மைப்)பிறர்சொல்லுகிற, இன்னாச்சொல் - இன்னாதசொல்லை, நோற்பாரின் பின்-பொறுப்பாரிற் பின்.

பிறர் - அறிவில்லாதார். நோலாமைக்கேதுவாகிய இருவகைப்பற்றுமு நின்றே நோற்றலின், 'இன்னாச்சொன் னோற்பாரிற் பின்' என்றார். ஊண் - உணவு. இன்னாதசொல் - கடுஞ்சொல்.

"பிறன்மனை புகாமை அறமெனத்தகும்" என்றும்பாடம். இதற்கு, பிறன் மனையாளிடத்தில் இச்சித்துப் போகாமையே எல்லாத் தருமங்களினுஞ் சிறந்த தருமமென்று சொல்லத்தகும் என்பது பொருள்.

62. பீடேவரினும் வாடாதிரு.

(ப-ரை.) பீடேவரினும் - (நீ முயற்சிசெய்யும்போது) துன்பங்களே வந்துகொண்டிருந்தாலும், வாடாது இரு-மனந்தளராமலிரு, எ-று.

(க-ரை.) நீயொருகாரியஞ் செய்ய முயலுங்காலத்தில் துன்பங்களே மிகுந்து வந்துகொண்டிருந்தாலும் நீ அவற்றுக்கு மனந்தளராம லிருக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை.) பீடு - தாழ்வு; அது இங்கே ஆகுபெயராய்த் துன்பத்தை யுணர்த்திற்று. பீடு-தாழ்வு என்பதை, வரவரப் பீடுகாலமாயிற்று என்னுஞ் செந்தமிழ்நாட்டு வழக்கு நோக்கியறிக. வாடாதிரு என்றமையால் மனமகிழ்ந்திரு என்பதும் பெறப்பட்டது. இதனால் மனந்தளராமலே முயற்சி செய்திருப்பையாயின் அத்துன்பங்களே துன்புற்று நீங்குமென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள்-இடுக்கணழியாமை-ரு-ம் பாட்டு,

" அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். "

அடுக்கிவரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும், அழிவு இலான் - தன்னுள்ளக்கோட்பாடு விடாதவன், உற்ற-அடைந்த, இடுக்கண்-துன்பங்கள், இடுக்கண்படும்-துன்பப்பட்டொழியும்.

ஒன்றேபலகால் வருதலும் வேறுபட்டன விரவிவருதலும் அடங்க 'அடுக்கிவரினும்' என்றார். அடுக்கிவரினும் என்றமையால் இடுக்கண்கள் பலவென்பது பெறப்பட்டது. கோட்பாடு - கொள்கை.

"பீரம்பேணி பாரந்தாங்கும்" என்றும் பாடம். இதற்கு, முன்னே முலைப்பால் குறைவறவுண்டு வளர்ந்தவன், பின்னே பாரமான சுமையைச் சுமக்கும் வலியுள்ளவனுவான் என்பது பொருள். பீர் - முலைப்பால். அது அம்முச்சாரியைபெற்றுப் பீரம் என்றாயிற்று. முன்னேவேண்டிய சாதனங்களை யெல்லாம் குறைவறச் சேகரித்துக் கொண்டவன், பின்னே பெரியகாரியங்களையு மெடுத்து முடிக்கவல்லவனுவனென்பது உள்ளுறை.

63. புலையுங்கொலையுங் களவுந்தவிர்.

(ப-ரை.) புலையும் - (பொய்முதலிய) இழிசொற்களையும், கொலையும் - உயிர்க்கொலை செய்தலையும், களவும் - பிறர்பொருளை வஞ்சித்துத் திருடுதலையும், தவிர் - நீ யொழித்துவிடு, எ-று.

(க-ரை.) பொய்முதலிய இழிசொற் சொல்லுதலையும், உயிர்க்கொலைசெய்தலையும், பிறர் பொருளை வஞ்சித்துத் திருடுதலையும் நீ யொழித்துவிடு என்பதாம்.

(வி-ரை.) புல் என்பது மை விகுதிபெற்றுப் புன்மை யெனவும், ஐகாரம் பெற்றுப் புலையெனவும் நின்று, பொய்முதலிய இழிசொற்களையும் இழிவையும் உணர்த்திவருவதை, பொய்சொல்லக்கெடும் புலையாடக்கெடும் என்னுஞ் செந்தமிழ்நாட்டு வழக்கு

நோக்கியும், புலையார் என்னும் பெயர் நோக்கியும் அறிக. ஆடல் - வார்த்தைசொல்லுதல். புலையாடல்-இழிசொற்களைச் சொல்லுதல். ஒழுக்கத்தைக்கெடுத்த இழிகுலத்தானாகச் செய்வதனாலும், வறுமை மிகுத்து அருவருக்கத்தகுந்த நோயுடலும் இழிதொழில் வாழ்க்கையும் உண்டாமாதலாலும், அளவில்லாததீவினைகளை யெண்ணிச்செய்வித்து அப்போதே கேடுதருவதாதலாலும், இம்மூன்றையும் பற்றற விடவேண்டுமென்பது இதனாற் பெறப்பட்ட பொருள்.

இதற்குமுறையே-திருக்குறள்-ஒழுக்கமுடைமை-கூ-ம் பாட்டாகிய,

" ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். " என்பதும்,

கொல்லாமை - கo - ம் பாட்டாகிய,

" உயிருடம்பி னீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். " என்பதும்,

கள்ளாமை - கூ - ம் பாட்டாகிய,

" அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். " என்பதும்,

உதாரணமாகக் கொள்க.

ஒல்லா - முடியா. தீய - தீயசொற்கள். அவை - பிறர்க்குத்தீங்கு பயக்கும் பொய்முதலியவும், கருணைத்திற்குரிய வல்லனவுமாம். வழுக்கியும் - மறந்தும். செயிர் உடம்பு - நோக்கலாகா நோயுடம்பு. நோக்கலாகா நோய் என்றமையால் அருவருக்கத்தக்க தொழுநோ யென்றுரைத்துக்கொள்க. தீ வாழ்க்கை-வறுமைமிக்க இழிதொழில் வாழ்க்கை. உடம்பின்-உடம்பினின்று,நீக்கியார்-நீக்கினவர். செய்தாங்கே-வினைத்தபொழுதே. வீவர்-கெடுவர். தேற்றாதவர்-அறியாதவர். புலை யென்பதற்குப், புலாலுண்ணுதல் எனப் பொருள்கூறலுமாம்.

64. பூரியோர்க்கில்லை சீரியவொழுக்கம்.

(ப-ரை.) பூரியோர்க்கு - கீழ்மக்களுக்கு, சீரிய - சிறந்த, ஒழுக்கம் - ஆசாரம், இல்லை - (இயல்பாகவே) இல்லையாகும், எ-று.

(க-ரை.) கீழ்மக்களுக்குச்சிறந்தவொழுக்கம்இல்லையென்பதாம்.

(வி-ரை.) பூரி - குற்றம். குற்றமுள்ளவர்களாதலால் கீழ்மக்களைப் 'பூரியோர்' என்றார். சீரிய - சீர்மை யென்னும் பண்படியாகப் பிறந்த பெயரெச்சம். ஒழுக்கம் - ஒழுகுதல் (நன்னெறியில் நடத்தல்). 'பூரியோர்க்கு சீரியவொழுக்கம் இல்லை' என்றதனால் தீயொழுக்க முண்டென்பது பெறப்பட்டது. தீயொழுக்கம்-தீநெறிக்கண்ணேநடத்தல். இயல்பாக என்பது சொல்லெச்சமாய்க் குறைந்து நின்றது. இச்சொல்லெச்சத்தால், அச்சம்பற்றியும் ஆசைபற்றியும் சிறிதுண்டாயினு முண்டாகலா மென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கயமை - ரு- ம் பாட்டு,

"அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது."

கீழ்கள் - கீழ்மக்கள் (கயவர்), ஆசாரம் - ஆசாரத்திற்குக் காரணம், அச்சம் - (அரசனால் ஏதம்வருமென்றஞ்சும்) அச்சம். அவா - விரும்பப்படும் பொருள்.

65. பெற்றோர்க்கில்லை கற்றவனாகுதல்.

(ப-ரை.) கற்றவன் ஆகுதல் - ஒருவன் எல்லாநூல்களையும் கற்றுப் பெருமையுடையவனா யிருப்பது, பெற்றோர்க்கு-(பிறரேற்றுக் கொள்வதேதவிர) அவனைப்பெற்ற தாய் தந்தையர் பொருட்டு, இல்லை-(பிள்ளையாக ஏற்றுக்கொள்வதன்றிப்) பெருமை யுடையவனாக ஏற்றுக்கொள்வதில்லை, எ-று.

(க-ரை.) ஒருவன் கல்வியிற் சிறந்தவனாய்ப் பெருமை யடைந்திருப்பினும், அவனது பெருமையைப் பிறர்கொண்டாடுவதேயன்றி அவன் தாய்தந்தையர் கொண்டாடா ரென்பதாம்.

(வி-ரை.) தாய்தந்தையர் தம்மகனது கல்விச்சிறப்பை யேற்றுக்கொள்ளாது, அவனைப் பிள்ளையாக எற்றுக்கோடலேஅவர்களுக்கு ஒழுக்கமாதலால் அதன்கேட்டிற் கஞ்சியும், கல்விச்சிறப்பை யேற்றுக்கொண்டு புகழ்ந்தால் அவன் இறுமாந்து கெடுவனென்பதற் கஞ்சியும்,அவனது கல்விச்சிறப்பை யேற்றுக்கொள்ளா ரென்பதிதனுற் போந்தபொருள். தம்மொழுக்கங் கெடுதற்கஞ்சியே தசரத சக்ரவர்த்தியும் கோசலையும் ஸ்ரீராமனைப் பிள்ளையாக வேற்றுக்கொண்டதும் வசுதேவரும் தேவகிதேவியும் கண்ணபிரானைப் பிள்ளையாக வேற்றுக்கொண்டதும் காண்க. அன்றியும், டில்லிக்கரசாயினும் தல்லிக்குப் பிள்ளையென்னும் வழக்குண்மையுமறிக. தல்லி - தாய். இது திசைச்சொல்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒழுக்கமுடைமை - கூ-ம் பாட்டு,

> "ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தின்
> ஏதம் படுபாக் கறிந்து."

ஒல்கார் - சுருங்கார். ஒல்கல் - சுருங்கல். உரவோர் - மனவலியுடையோர். உரம் - வலி. இழுக்கத்தின் - சுருக்கத்தால், ஏதம்-குற்றம், படுபாக்கு - படுதல். இதில் பாக்கு தொழிற்பெயர் விகுதி.

"பெற்றோர்க்கில்லை சுற்றமுஞ்சினமும்" என்றும் பாடம். இதற்கு, மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவருக்கு, உறவினர்மேல்விருப்பும் பிறர்மேல் வெறுப்பும் இல்லையென்பது பொருள்.

66. பேதைமையேன்பது மாதர்க்கணிகலம்.

(ப-ரை.) பேதைமை என்பதும் - மடமையென்று சொல்லப்படுவதும், மாதர்க்கு-பெண்களுக்கு, அணிகலம் - ஆபரணம்போல் அழகுசெய்யும், எ-று.

(க-ரை.) பெண்களுக்கு மடமையென்று சொல்லப்படுவதும் ஆபரணம்போ லழகுசெய்யும் என்பதாம்.

(வி-ரை.) "நாணமே மடமேயச்சம் நாட்டியபயிர்ப்பு நான்கும் மாணிழை மடநல்லார்க்கு வைத்தநற் குணங்களாகும்" என்பது நிக

ண்டாதலால், பேதைமை யென்பதும் என்றவும்மையால், ஒழிந்த நாணமும் அச்சமும் பயிர்ப்பும் அவர்க்கழகுசெய்யும் நற்குணங்களென்பது பெறப்பட்டது. பெறவே, புருடர்க்கு, அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் நான்கும் சிறந்தனபோல, மாதர்க்கு அவைசிறந்தனவென்பது இதனாற்போந்த பொருள். பேதைமையென்பதும் என்றவும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை யாதலால், பொன்னாலியன்ற அணிகலமேயன்றி யெனப் பொருளுரைத்துக்கொள்க. இதற்குதாரணம்:—திருக்குறள்-நெஞ்சொடுகிளத்தல்- எ-ம் பாட்டு,

"காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு."

படர்மெலிந்திரங்கல் - ரு - ம் பாட்டு,

"காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து."

பொறேன் - பொறுக்கமாட்டேன் (தாங்கும் வலியிலேன்). காவா - காத்தண்டாக. கா - காவடி. தூங்கும் என்பது ஒன்றினொன்றுமிகாது இரண்டும் ஒத்தசிரவென்பதுதோன்றநின்றது. நோனா - பொறுக்காத. நோன் - பகுதி.

இச்சூத்திரத்திற்கு அறியாமையென்று சொல்லப்படுங் குணமானது பெண்களுக்கு ஆபரணமாகும் என்று பொருளுரைத்தலுமுண்டு. இப்பொருள் சிறந்து காட்டிற்றில்லை.

67. பையச்சேன்று பதியிற்றங்கு.

(ப-ரை.)பையசென்று-(நீயாத்திரைசெய்யவேண்டின்)மெல்ல நடந்துபோய், பதியில் தங்கு - ஊர்கண்ட இடத்திலே ஒருநாள் தங்கியிரு, எ-று.

(க-ரை) நீ யாத்திரை செய்யவிரும்பினால், மெல்ல நடந்துபோய் ஊர்கண்ட இடத்திலே ஒருநாள் தங்கியிருந்து பின்பு யாத்திரைசெய் யென்பதாம்.

(வி-ரை) பதி - ஊர். தங்குதல் - வசித்தல் யாத்திரை-பிரயாணம். நீயாத்திரை செய்யவிரும்பினால் விரையாது மெல்லநடந்து போய், வாய்ப்பான வூர்கண்டபோது அவ்விடத்தில் ஒருநாள் இரண்டுநாள் தங்கியிருந்து இளைப்பாற்றிக்கொண்டு, பிறகு பிரயாணஞ் செய்யவேண்டும், அப்படி செய்யாமல் விரைந்து சென்றால், செய்தொழிலின் மிகுதியால் நோயுண்டாமென்பதிதனாற் கூறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மருந்து - கூ-ம்-பாட்டு,

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று."

மிகினும் - (உணவு செயல்கள்) மிகுந்தாலும், குறையினும் - குறைந்தாலும், நோய்செய்யும் - துன்பஞ்செய்யும், நூலோர் - ஆயுர்வேதமுடையோர், வளிமுதலா எண்ணிய மூன்று - வாதமுதலாக எண்ணப்பட்ட மூன்றும். இத்திருக்குறள் மருந்து என்னும் அதிகாரத்தின் கண்ணதாதலாலும், வளிமுதலா வெண்ணிய மூன்றும் நோய்செய்யு மென்றதனாலும், நூலோர் என்றது பிறநூலாரை யுணர்த்தாது ஆயுணூலாரையே யுணர்த்திற்று. ஆயுணூல் - வைத்தியசாத்திரம்.

"பையச்சென்றால் வையந்தாங்கும்" என்றும்பாடம். இதற்கு மெல்ல ஒருவன் நல்லநெறியிலே நடந்தால் அவனை இவ்வுலகிலுள்ளார் மேலானவனாகக் கொள்வார் என்பது பொருள்.

68. பொல்லாங்கேன்பவை யெல்லாந்தவிர்.

(ப-ரை.) பொல்லாங்கு என்பவை எல்லாம்-தீங்கென்று அறிவுடையோரால் சொல்லப்பட்டவையாவும், தவிர்-நீ செய்யாமல் ஒழித்துவிடு, எ-று.

(க-ரை.) அறிவுடையோரால்தீங்கென்று சொல்லப்பட்டவையாவும் நீசெய்யாமல் ஒழித்துவிடு என்பதாம்.

(வி-ரை.) பொல்லாங்கு என்பவை என்றமையாலும், தவிர் என்றமையாலும், அவற்றிற்கேற்க அறிவுடையோர் என்பது வரு

விக்கப்பட்டது. எல்லாம் என்றது ஒன்ருயினு மெஞ்சியிராமை தோன்றநின்றது. அறிவிலிகள் அப்பொல்லாங்குகளைத் தமக்குறுதிப் பொருள்களா யெண்ணிச் செய்வோராதலால் அவர் அவற்றைத் தவிரார் என்பதும் இதனுற் பெறப்பட்டது. யான் இதுபொழுது வறியனுயினேன் என்று அது தீர்தற்பொருட்டுப் பொல்லாங்குகளைச் செய்வையாயின், அச்செய்கையால், இனிவரும் பிறவிதோறும் மிக்க வறுமையை யுடையவனே யாவா யென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - தீவினையச்சம்- ரும் - பாட்டு,

" இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனுகு மற்றும் பெயர்த்து."

இலன் என்று-யான் வறியனென்று கருதி, (அது தீர்தற்பொருட்டு) தீயவை - (பிறர்க்குத்) தீங்குபயக்கும் வினைகளை, செய்யற்க - (ஒருவன்) செய்யாதொழிக; செய்யின் - செய்வானுயின், பெயர்த்தும் இலனுகும் - பெயர்த்தும் வறியனுவன். வறியன் - தரித்திரன். பெயர்த்து - மறுபடியும் (பிறவிதோறும்).

69. போனகமேன்பது ஞானவரம்பு.

(ப-ரை.) போனகம் என்பது - ஒழிந்தவிதியென்பது (ஒழிந்த பிறப்பென்பது), ஞான வரம்பு - (மெய்ப்பொருளை யுணர்ந்த) மெய் யுணர்வி னெல்லையாம், எ-று.

(க-ரை.) மெய்யுணர்வி னெல்லையே பிறப்பொழிவி னெல்லை யென்பதாம்.

(வி-ரை.) கம் - தலை. அது தலையெழுத்தாகிய விதியை யுணர்த்திற்று. விதியாவது - பலபிறவிகளிற் சென்றுழல்வதாகிய நியமம். இதனைக்கடத்தலே (பிறப்பொழித்தலே) ஞானவெல்லை யென்பதிதனுற் போந்தபொருள். ஞானம் - மெய்யுணர்வு. இந்த மெய்யுணர்வு தோன்றுதலும் பிறவியறுமென்பது திண்ணம் என்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - மெய்யுணர்தல் - எ - ம் பாட்டு,

"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு."

ஓர்த்து - (அளவைகளாலும் பொருந்துமாற்றானும் தெளிய) ஆராய்ந்து, உள்ளம் - மனம், ஒருதலையா - தெளிய, உணரின் - முதற்பொருளை யுணர்ந்தால், உள்ளவேண்டா - நினைக்க வேண்டா.

"போனகமென்பது தானுழந்துண்டல்" என்றும் பாடம். இதற்கு, போசநமென்று சொல்லப்படுவது தான் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து உண்ணுதலேயாம் என்பது பொருள்.

70. மருந்தோடாயினும் விருந்தோடுண்.

(ப-ரை.) மருந்தோடு ஆயினும் - (நீயுண்பது சாவாமைக்கேதுவாகிய) அமிர்தமேயாயினும், விருந்தோடு உண்-(அதனை, உன்னைநாடிவந்த) விருந்தினரோடு கூடியிருந்து உண்ணக்கடவை, எ-று.

(க-ரை.) உன்னாலுண்ணப்படுவது அமிர்தமே யாயினும் விருந்தினரோடன்றி நீ தனித்துண்ணலாகா தென்பதாம்.

(வி-ரை.) உடம்பைப் பற்றின பிறநோய்களுக்குப் பரிகாரங்களாயுள்ள மருந்துகள்போல, நரைதிரை மூப்புச் சாக்காடுகளாகிய நோய்களை யொழித்தலால் அமிர்தத்தை 'மருந்து' என்றார். ஒடு என்னும் இசைநிறை யிடைச்சொல் இங்கே ஓடு என நீண்டு நின்றது. விருந்தோடுண் என்றமையால், தனித்துண்ணலாகா தென்பதும் அப்படியுண்டல் அறிவுடையோர் செய்கையன் றென்பதும் பெறப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள் - விருந்தோம்பல் - உ - ம் பாட்டு,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

விருந்து - (தன்னைநோக்கிவந்த) விருந்து, புறத்தது ஆ - (தன் வீட்டின்) புறத்ததாக, தான் உண்டல் - தானே தனித்துண்ணுதல்,

சாவா மருந்து - சாவாமைக்கேதுவாகிய மருந்து. (மருந்து - அமிர்தம்), வேண்டற்பாற்று அன்று - விரும்பும்பான்மையுடைத்தன்று. விருந்து - விருந்தினர். இதுபண்பாகுபெயர். பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அது இன்மையிற் குறியாது வந்தாரும் என விருந்தினர் இருவகையர்.

"மருந்தேயாயினும்" என்றும்பாடம். இதற்கு, நீயுண்பது சாவாமைக்கேதுவாகிய அமிர்தமேயாயினும் என்பது பொருள்.

71. மாரியல்லது வாரியில்லை.

(ப-ரை.) மாரி அல்லது-(யார் யார்க்கும்) மழையையன்றி, வாரி இல்லை - (உலகியல் நடத்தற்பொருட்டு) நீரில்லை, எ-று.

(க-ரை.) எவ்வெவர்க்கும் உலகியல் நடத்தற்குரிய நீர் மழையையின்றி ஒருவாற்றானுங் கிடைத்தலரிதென்பதாம்.

(வி-ரை.) வாரி - நீர். வாரி - நீர்வருவாய் என்றும், விளைவு என்றும் பொருளுரைத்தலுமாம். இல்லையென்றது அரிது என்றபடி. மாரியல்லது வாரியில்லையென்றமையால், மாரியுண்டாயின் வாரியுண்டென்பது தானே விளங்கிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வான்சிறப்பு - ௨௦ - ம் பாட்டு,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு."

யார்யார்க்கும் - எவ்வகை மேம்பாட்டார்க்கும், நீர் இன்று - நீரையின்றி, உலகு அமையாது எனின் - உலகியல் அமையாதாயின், ஒழுக்கு - (அந்நீர் இடையறாதொழுகும்) ஒழுக்கும், வான் இன்று அமையாது - வானையின்றி யமையாது. வான் - மழை. உலகியல் - பொருளின்பங்கள்.

"மாரியல்லது காரியமில்லை" என்றும்பாடம். இதற்கு, மழையினலல்லாமல் யாதொருகாரியமும் யாருக்கும் நடப்பதில்லை யென்பது பொருள்.

72. மின்னுக்கெல்லாம் பின்னேமழை.

(ப-ரை.) மின்னுக்கு எல்லாம் - (ஆகாயத்தில் தோன்றுகின்ற) எல்லாமின்னல்களாலும், பின்னேமழை - பின்புமழைபெய்யுமென்பது நிச்சயம், எ-று.

(க-ரை..) முன்பு மேகத்தில் தோன்றுகிற மின்னலால் பின்பு மழைபெய்தல் நிச்சயிக்கலா மென்பதாம்.

(வி-ரை) பின்னே யென்னும் ஏகாரம் தேற்றம். மின்னுக்கெல்லாம் என்பது உருபுமயக்கம். இது ஒட்டலங்காரமாதலால் முன்பு முகமலர்தலாலும் கறுத்தலாலும் பின்பு மகிழ்வும் கோவமும் உண்டாவது நிச்சயமெனப் பிறிதுபொரு ளுணர்த்தியது காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - குறிப்பறிதல் - எ - ம் பாட்டு,

> " முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
> காயினுந் தான்முந் துறும். "

முகத்தின் - முகம்போல, முதுக்குறைந்தது - அறிவு மிக்கது. உவப்பினும் - (உயிர் ஒருவனை) உவத்தலானும், காயினும் - காய்தலானும், முந்துறும் - முற்பட்டு நிற்கும்.

உவத்தலானும், காய்தலானும் என்பவற்றிலுள்ள ஆனும் என்பவற்றிற்கு ஆயினும் என்பது பொருளாதலால் இது ஆயினும் என்பதன்தொகுத்தலாகக் கொள்க. உவத்தல் - மகிழ்தல். காய்தல்-கோவித்தல். முதுக்குறைதல் - அறிவு மிகுதல். உண்டோ என்பதில் ஓகாரம் இல்லையென்னும் பொருள் பயத்தலால் எதிர்மறை.

"மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை" என்றும் பாடம். இதற்கு, வானத்திலே காணப்பட்ட மின்னலுக் கெல்லாம் அப்போது மழையில்லையாயினும் பின்னே மழையுண்டாகும் என்பதுபொருள், ஒருவனிடத்தில் காணப்பட்ட நன்முயற்சிகள் யாவும் அப்போது பயன்தராதாயினும் பின்னே பயன்தருமென வேறொரு பொருள் தோன்றுதலுங் காண்க.

73. மீகாமனில்லா மரக்கலமோடாது.

(ப-ரை.) மீகாமன் இல்லா - மாலுமியில்லாத, மரக்கலம் - கப்பலானது, ஓடாது - தானே யோடமாட்டாது, எ-று.

(க-ரை.) கப்பலானது ஓட்டுகிற மாலுமி யில்லாமல் தானே யோடமாட்டா தென்பதாம்.

(வி-ரை.) மீகாமன் - கப்பலோட்டுகிறவன். இவனுக்கு நீகா மரக்கலன் என்னும் பெயர்களும் வழங்கும். மீகாமனில்லா என்பதில் இன்மை, உடைமைக்கு மறுதலையாகிய இன்மை, உண்மைக்கு மறுதலையாகிய இன்மை என்கிற இரண்டனுள், உடைமைக்கு மறுதலையாகிய இன்மை. இதுவும் ஒட்டலங்காரமாதலால், படைத்தலைவனில்லாத சேனையானது பகைவர்படையை வெல்லும்படியாகச் சென்று போர்செய்யமாட்டாது எனப் பிறிதுபொருளுணர்த்தியது காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - படைமாட்சி - ௧0 - ம் பாட்டு,

"நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்."

நிலைமக்கள் - போரின்கண் நிலையுடைய வீரரை, சால - மிகவும், உடைத்து எனினும் - உடைத்தே யாயினும், தலை மக்கள் இல்வழி - தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழி, தானை இல் - தானைநில்லாது. தானை - படை. இல்லாதவழி - இல்லாத போது. படைத்தலைவர் நிலையுடையரன்றிப்போவாராயின், காண்போரில்லையெனத் தானும் போமென்பார், 'தலைமக்க ளில்வழியில்' என்றார்.

இச் சூத்திரத்திற்கு, தன்னையோட்டத்தக்க மாலுமியில்லாதமரக்கலமானது கடலிலே செவ்வையா யோடாது என்றும் பொருள் கூறுதலுண்டு. தன்னை முடிக்கத்தக்கவ னில்லாத யாதொரு கருமமும் முடியாதென்ப திதன் கருத்து.

74. முற்பகைசெய்யிற் பிற்பகைவிளையும்.

(ப-ரை.) பகை - (பிறர்க்கு) விரோதமான தீமையை, முன் செய்யின் - நீ முன்னே செய்வையாயின், பகை - அத்தீமையானது, பின் - பின்னே, விளையும் - உனக்குண்டாகும், எ-று.

(க-ரை.) நீ பிறர்க்குமுன்னே செய்த தீமையானது, பின்னே யுனக்குத்தானே விளையும் என்பதாம்.

(வி-ரை.) பகை - ஆகுபெயர். பொதுப்பட முன்பின் என்றமையால் ஒருபகலின் முன் எனவும் அப்பகலின் பின் எனவும் கொள்க

இதற்குதாரணம்:—திருக்குறள் - இன்னாசெய்யாமை-௯-ம் பாட்டு,

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

பிறர்க்கு - அயலார்க்கு, இன்னா - தீமைகள், முற்பகல் - ஒருபகலின் முற்கூறு. பிற்பகல்-ஒருபகலின் பிற்கூறு. முற்பகல் பிற்பகல் என்பன பின் முன்னாகத்தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை. இங்ஙனம் கடிதினும் எளிதினும் வருதலால் அவை செய்யற்க என்பது கருத்து.

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்றும்பாடம். இதற்கு, ஒரு முகூர்த்தகாலத்தின் முற்பங்கிலே பிறனுக்குத் தீங்குசெய்தால், அதன் பிற்பங்கிலே செய்தவனுக்கு அத்தீங்குதானே யுண்டாகும் என்பது பொருள்.

75. மூத்தோர்சொன்ன வார்த்தையமிர்தம்.

(ப-ரை.) மூத்தோர்-(கல்வியறிவொழுக்கங்களில்) சிறந்தோர், சொன்ன - சொல்லிய, வார்த்தை - வார்த்தையானது, அமிர்தம் - அமிர்தத்தை நிகர்க்கும், எ-று.

(க-ரை.) கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தோர் சொன்ன வார்த்தை அமிர்தத்தை நிகர்க்கும் என்பதாம்.

(வி-ரை.) ஒக்கும் என்னும் முற்றுவினைச்சொல் எச்சமாய்க் குறைந்துநின்றது. அமிர்தத்தையுட்கொண்டார் அழியாதிருத்தல் போல மூத்தோர்சொல்லை யுட்கொண்டவரும் அழியாதிருப்பர் என்பது இதனாற்போந்த பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கேள்வி - கூ - ம் பாட்டு,

"செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து."

செவி உணவின் - செவியுணவாகிய, கேள்வி உடையார் - கேள்வியினையுடையார், நிலத்து - நிலத்தின் கண்ணராயினும், அவி உணவின் - அவியுணவினையுடைய, ஆன்றாரோடு - தேவரோடு, ஒப்பர் - நிகர்ப்பர்.

செவியுணவின் என்பதில் இன் அல்வழிச்சாரியை. செவியுணவு - செவியானுண்ணு முணவு, அதுகேள்வி. ஆன்றார் - தேவர். அறிவால் நிறைந்தவராதலாலும், துன்பமறியாதவ ராதலாலும் தேவரை ஆன்றார் என்றார். ஆன்றாரோடொப்பர் என்றமையால் கேள்வியுடையவரும் அத்தன்மையர் என்பது பெறப்பட்டது.

76. மெத்தையிற்படுப்பது நித்திரைக்கழகு.

(ப-ரை.) இதன்பொருள் விளங்கிக்கிடந்தது.

இனி இதற்கு வேறுரை:

மெத்தை படுப்பது இல்லடுப்பது எனப்பிரித்துக்கூட்டி நீ இலவம்பஞ்சு மெத்தையிலே படுப்பதுபோல நீ செய்யுந் தருமத்தை நின் இல்லாளோ டென்படுத்து இருவரும் அன்புடையவராகிச் செய்வது, நித்திரைக்கு அழகு - உன் நித்திரைக்குப்போல அழகு செய்யும், எ-று.

(வி-ரை.) நீ மெத்தையிலேபடுப்பது நித்திரைக் கழகுசெய்தல் போல, நீ செய்யும் இல்லறத்தை நின் இல்லாளும் உடன்பட விரு

வரும் அன்புடையவராகிச் செய்வது அதற்கழகு செய்யுமெனப் பொருளுரைத்துக் கொள்க. இல் - மனையாட்டி. இல்லறத்தை யென்பதும் போலவென்பதும் அதற்கு என்பதும் வருவிக்கப்பட்டன. அவைவேண்டியே நிற்றலால், இல்லாளுக்கும் கணவனுக்கும் நெஞ்சொன்றுகாதபோது அவ்வில்வாழ்க்கை இனிது முடியாதாதலால், இருவரும் நெஞ்சொன்றபட்டு அன்புடையராவது அந்த இல்லறத்திற்கு வடிவும் அவளோடுகூடிச் செய்யப்படுந் தருமம் பயனுமாக, அவ்வில்வாழ்க்கைக்கு அழகுசெய்யு மென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இல்வாழ்க்கை - ரு-ம் பாட்டு,

" அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது."

என இக்கருத்திற் கியையத் திருவள்ளுவனாரும் கூறுதல் காண்க. இது சிலேடையும் உவமையும் நிறனிறையும் விரவிய ஒட்டலங்காரம்.

77. மேழிச்செல்வம் கோழைபடாது.

(ப-ரை.) மேழி - கலப்பையாலுண்டாகிற, செல்வம் - செல்வமானது, கோழைபடாது - (ஒருக்காலும்) தாழ்வுபடாது, எ-று.

(க-ரை.) கலப்பையா லுண்டாகுஞ் செல்வம் ஒருக்காலும் குறைவுபடாது என்பதாம்.

(வி-ரை.) கோழைபடுதல் - குறைவுபடுதல். மேழிச்செல்வம்-கலப்பையால் உழுது பயிர்செய்தலால் வருஞ்செல்வம். கோழைபடாதென்றமையால் இதனையொழிந்த மற்றைத் தொழில்களால் வருஞ் செல்வங்களெல்லாம் கோழைபடும் என்பது பெறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ச-ம் பாட்டு,

" பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்."

பலகுடை நீழலும் - பலவேந்தர் குடைநிழலதாய மண் முழுதினையும், தம்குடைக் கீழ்காண்பர்- தம்வேந்தர் குடைக்கீழேகாண்பர், அலகு உடை - உழுதற்றொழிலான் நெல்லினையுடையராய், நீழலவர் - தண்ணளியுடையோர். அலகு - கதிர்; அது ஈண்டாகுபெயராய் நெல்லினையுணர்த்திற்று. உடையவென்பது உடையெனக் குறைந்து நின்றது. நீழல் போறலின் தண்ணளி நீழல் எனப்பட்டது. நீழலவர் என்றது இரப்போர்க்கெல்லாம் ஈதல்நோக்கி. ஒற்றுமைபற்றித் தம்குடை என்றார். குடைநீழல் - ஆகுபெயர்.

78. மைவிழியார்தம் மனையகன்றொழுகு.

(ப-ரை.) மைவிழியார்-அஞ்சனமெழுதப்பெற்ற கண்களையுடையவராகிய விலைமாதரது, மனை - வீடுகளை, அகன்று ஒழுகு - நீயணுகாமலே விலகிப் போவாயாக, எ-று.

(க-ரை.) விலைமாதர் வீடுகளைச் சேராதை யென்பதாம்.

(வி-ரை.) அகன்றொழுகாவிடின், அவர் மைவிழியும் இன்சொல்லும் உன்னை வலிந்துபற்றித் துயர்செய்யுமென்ப திதனாற் போந்த பொருள். மைவிழியார்தம் என்பதில் தம் சாரியை. இதன் விரிவெல்லாம் ஆத்திசூடியில், 'மைவிழியார் மனையகல்' என்னுஞ் சூத்திரவுரையிற் காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வரைவின்மகளிர்-க-ம் பாட்டு,

"அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்."

அன்பின் - அன்பினால், பொருள் - பொருள் (இன்) - பொருளினால், விழையார் - முற்றெச்சம், (விரும்பாதவராகி) இழுக்கு - துன்பம். ஆய்தொடியார் - ஆராய்ந்த வளையலை யணிந்தவர் (மகளிர்). ஆய்தொடியும் இன்சொல்லும் அவர்க்குக்கருவியாதல் இத்திருக்குறளாற் கூறப்பட்டது. முன்பு இன்பம்போற் றோன்றிப் பின்பு துன்பஞ் செய்தலால், 'இன்சொ லிழுக்குத் தரும்' என்றார்.

79. மொழிவதன்னை யழிவதறமொழி.

(ப-ரை.) மொழிவதன்னை-நீ சபையிலே சொல்லுஞ் சொல்லை, அழிவது அற - பிறர் சொல்லால் கெடுவதற, மொழி - நீ நன்றாக யோசித்துப் பின்பு சொல்லக்கடவை, எ-று.

(க-ரை.) நீ சபையிலே பேசும்போது நன்றாக யோசித்துப் பேசு என்பதாம்.

(வி-ரை.) மொழிவதனை என்பதில் மொழிவதன்னை எனச் சந்தி வின்பம் நோக்கி ஐயுருபின் முன் சாரியைக் குற்றொற்று இரட்டித்து நின்றது, யோசித்து என்னும் இரண்டனுருபின் பொருள் தொக்குநின்றது. அழிவது அற - கெடாதிருக்கும்படி.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சொல்வன்மை-ரு-ம் பாட்டு,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து."

பிறிதோர்சொல் - மாற்றாரது மறுதலைச்சொல். வெல்லுதல் - குணங்களான் மிகுதல். இன்மை - இல்லாமை. அறிந்து - ஆராய்ந்தறிந்து. தாம் கருதிய சொல்லைச்சொல்ல விரும்புவோர், அச்சொல் பிறிதொரு சொல்லால் அழியாது நிலைபெறும்படி யாராய்ந்து சொல்லவேண்டு மென்பதாம்.

"மொழிவது மறக்கின் அழிவது கருமம்" என்றும் பாடம். இதற்கு, கற்றோர்சொல்லும் உபாயத்தைக் கேளாமற் செய்தால், ஒருவன் செய்யுந் தொழில் கெடுவதாகும் என்பது பொருள்.

80. மோகந்தன்னை முனிந்தறின்வீடு.

(ப-ரை.) மோகந்தன்னை - ஆசையை, முனிந்து அறின் - வெறுத்தொழிந்தால், வீடு - (அதுவே) வீடாகும் எ-று.

(க-ரை.) ஆசையை யொழித்தால் அவ்வொழிவே முத்தியாம் என்பதாம்.

(வி-ரை.) மோகம் - ஆசை. மோகந்தன்னை என்பதில் தன் சாரியை. முனிந்து என்றது முனிந்தறின் என்றமையால் ஆசையை நிர்மூலமாக்கவேண்டும் என்றதாயிற்று. வீடு - முத்தி. வீடு என்பது முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; விடுதல் என்பது பொருள். விடு-பகுதி. அதுவே என்னும் சுட்டும் தேற்றேகாரமும் சொல்லெச்சமாய்க்குறைந்து அவ்வொழிவின்மேல் நின்றன. ஆசையறுமளவு முனிவுகொண்டேநின்றாலறும், அற்றால்முத்திபெறலாம் என்பதாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - அவாவறுத்தல் - கO-ம் பாட்டு,

"ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்."

ஆரா இயற்கை - (ஒருகாலும்) நிரம்பாத இயல்பினையுடைய, அவா - அவாவினை, நீப்பின் - (ஒருவன்) நீக்குவனாயின், அந்நிலையே - (அந்நீப்பு) அவனுக்கு அப்பொழுதே, பேரா இயற்கை - எஞ்ஞான்றும் ஒருநிலைமையனா மியல்பை, தரும் - கொடுக்கும்.

ஆர்தல் - நிரம்புதல். அவா - ஆசை. நீத்தல் - நீக்கல். பேரா - நிலைபெயராத, பேராவியற்கை - வீடு (முத்தி).

"மோனமென்பது ஞானவரம்பு" என்றும் பாடம். இதற்கு, மௌனநிலை யென்பது மெய்ஞ்ஞானத்தின் எல்லையாகும் என்பது பொருள்.

81. வளவனாயினு மளவறிந்தளித்தல்.

(ப-ரை.) வளவன் ஆயினும் - நீ செல்வமுடையவனாயினும், அளவு அறிந்து - உனக்குள்ள பொருளினளவை யறிந்து, அளித்தல் - அதற்கியையும்படி பிறர்க்கு ஈயக்கடவை, எ-று.

(க-ரை.) நீ பெருஞ்செல்வனாயினும் உனக்குள்ள பொருளினளவறிந்து பிறர்க்குக் கொடுக்கக்கடவை என்பதாம்.

(வி-ரை.) வளம் - செல்வம் ஆதலால், வளவன் என்பதற்குச் செல்வத்திற் சிறந்தவன் என்றும் குபேரன் என்றும் பொருளுரைத்துக்கொள்க. வளம் அன் என்பது அத்துச்சாரியை பெற்று

வளத்தான் என்ருகாமல் வகரஉடம்படுமெய் பெற்று வளவன் என்ருயிற்று. ஆயினும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. அளித்தல் - தல்லீற்று வியங்கோள். இவ்வாறு முதலையறிந்து அதற்குத்தக ஈவது பொருளைப் போற்றும் நெறியென்பது இதனுற் போந்த பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வலியறிதல் - எ-ம் பாட்டு,

"ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

ஆற்றின்-ஈயும் நெறியாலே, அளவு அறிந்து-தமக்குள்ள பொருளின் எல்லையை யறிந்து, ஈக - (அதற்கேற்ப) ஈக, அது-அங்ஙனமீதல், பொருள் போற்றி வழங்கும் நெறி - பொருளைப் பேணிக் கொண்டொழுகும் நெறியாம்.

எல்லைக்கேற்ப வீதலாவது-வருவாய்ப் பொருளை நான்கு கூருக்கி அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி, ஒன்றனை மேல் இடர் வந்துழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்ற வொன்றனை யீதல். "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச், செய்தவை நாடாச் சிறப்புடைமை-யெய்தப், பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும், நலமாட்சி நல்லவர்கோள்" என்ருர் பிறரும். "வளவனுயினும் அளவறிந் தழித்துண்" என்றும் பாடம். இதற்கு நீ சம்பத்திலே சோழனுக்கு ஒப்பானவனு யிருந்தாலும், பொருள் வருவரவினளவைத் தெரிந்து, அதற்குத் தகுதியாகச் செலவுசெய்து நீயும் அநுபவிப்பாயாக என்பது பொருள்.

82. வானஞ்சுருங்கத் தானஞ்சுருங்கும்.

(ப-ரை.) வானம் சுருங்க - மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது சுருங்கவே, தானம் சுருங்கும் - ஒருவர்க்கு ஒன்றைக் கொடுப்பதாகிய ஈகையும் சுருங்கும், எ-று.

(க-ரை.) மழை பெய்யாதாயின் தானம் முதலியயாவும் இல்லை என்பதாம்.

(வி-ரை.) வானம்-மழை; இது இருமடியாகுபெயர். வானம் என்பதனை வான் அம் எனப்பிரித்து மேகத்தினின்று விழும் நீர் எனக்கொண்டு மழை எனப் பொருள் கூறினுமாம். சுருங்குதல் என்றது வானத்திற்கு மழைபெய்யாமையும் தானத்திற்குக் குறைவும் ஆகக்கொள்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வான்சிறப்பு-கக-ம் பாட்டு,

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்."

தானம் தவம் இரண்டும் - தானமும் தவமுமாகிய இரண்டறமும், தங்கா-உளவாகா, வியன் உலகம்-அகன்றவுலகின்கண், வானம்-மழை, வழங்காதெனின் - பெய்யாதாயின்.

தானமாவது - அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல். தவமாவது-மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மைபற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன.

"சுருங்கின்" என்றும் பாடம்.

83. விருந்திலோர்க்கில்லை பொருந்தியவொழுக்கம்.

(ப-ரை.) விருந்து - விருந்தோம்புதலாகிய அறத்தின் பயனை, இல்லோர்க்கு - உடையரல்லாதவர்க்கு, பொருந்திய ஒழுக்கம் - (செல்வத்தோடு) பொருந்திய நடை, இல்லை - (என்றும்) இல்லை, எ - று.

(க-ரை.) விருந்தோம்புதலாகிய அறத்தையுடைய ரல்லாதவர்க்குச் செல்வத்தோடு பொருந்திய நடை யில்லையென்பதாம்.

(வி-ரை.) விருந்து - மும்மடியாகுபெயர். செல்வத்தோடு என்றது குறிப்பெச்சம். இல்லோர் என்றதில் இன்மை உடைமைக்கு மறுதலையாகிய இன்மை.

இதற்குதாரணம்:—திருக்குறள் - விருந்தோம்பல் - அ-ம் பாட்டு,

"பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்."

விருந்து ஓம்பி-விருந்தினரை யுபசரித்து, வேள்வி - வேள்விப் பயனை, தலைப்படாதார் - அடையும் அறிவிலாதவர், பரிந்து ஓம்பி - வருந்திக்காத்து, பற்று அற்றேம் என்பர்-(யாம் இதுபொழுது) பற்றுக்கோடிலமாயினே மென்றிரங்குவர். தலைப்படல் - அடைதல். வேள்வி - ஆகுபெயர். இச்சூத்திரத்தில், பொருந்திய வொழுக்கம் என்பதற்கு தாம் பொருந்திய இல்வாழ்க்கைக்குரிய நடையெனப் பொருள் கூறுதலுமுண்டு.

84. வீரன்கேண்மை கூரம்பாகும்.

(ப-ரை.) வீரன்-(உயிர்வாழ்க்கை வீரவாழ்க்கையின் பிற்பட்டதாக நினைத்திருக்கிற) வீரனது, கேண்மை-நட்பானது, (அரசனுக்கு உளதாயின் அது) கூர் அம்பு ஆகும் - (தன் பகையை நெருங்காமற் காத்தற்கு எப்பொழுதும் வில்விற்பூட்டின) கூர்மையாகிய அம்புக்கு நிகராகும், எ-று.

(க-ரை.) உயிர் வாழ்க்கையினும் வீரவாழ்க்கை சிறந்ததென்று நினைக்கிற வீரனது நட்பானது அரசனுக்கு இருக்குமாயின், அது அவ்வரசனைப் பகைவர் அணுகாமற் காத்தற்குரிய கூரிய அம்புக்கு நிகரா மென்பதாம்.

(வி-ரை.) வீரன் - வீரத்தன்மையுள்ளவன். கேண்மை - கேளாந்தன்மை. வேண்டியே நிற்றலால் இசையெச்சங் குறிப்பெச்சங்கள் வருவித் துரைக்கப்பட்டன.

இதற்குதாரணம்:—திருக்குறள்-படைச்செருக்கு- அ-ம் பாட்டு,

"உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்."

உறின் - (போர்) பெறின், உயிர் அஞ்சா - தம் உயிர்ப்பொருட்டஞ்சாது (அதன்மேற் செல்லுகிற), மறவர்-வீரர், இறைவன் செறி

னும் - தம்மிறைவன் (அது வேண்டாவென்று) முனியினும், சீர் குன்றல் இலர் - அவ்வீரமிகுதி குன்றார்.

இச்சூத்திரத்திற்கு, வீரனுடைய சிநேகம் ஒருவனுக்கிருக்கு மாயின், அவனுக்கு அதுவே தன் பகைவனை வெல்லுதற்குக் கூர்மை பொருந்திய அம்பாகும் எனப்பொருள் கூறலுமாம்.

85. அம்ம, வுரவோரேன்கை யிரவாதிருத்தல்.

(ப-ரை.) இரவாது இருத்தல் - (உண்ணப்படுவன பெறாமல் வருந்தின விடத்தும்) பிறரிடத்திற்சென்று ஒன்றை யிரவாதிருக்கும் பெருந்தன்மையே, உரவோர் என்கை - அறிவுடையோரென்று சொல்லப்படும் பெருந்தன்மையாம், எ-று.

(க-ரை.) பசியால் வருந்தினவிடத்தும், பிறரிடத்துச் சென்று யாசியாத பெருந்தன்மையே அறிவுடையோரென்று சொல்லப்படும் பெருந்தன்மை யென்பதாம்.

(வி-ரை.) உரம் - அறிவு; ஆதலால் அறிவுடையோரை 'உரவோர்' என்றார். இரத்தல் - யாசித்தல். பிரிநிலையேகாரம் தொக்கு நின்றது. அதனாற் பிரிக்கப்பட்டது மற்றைக் கல்வி யறிவுடையோர் என்று சொல்லப்படும் பெருந்தன்மை. அதனினும் இது பெருந்தன்மை யென்பதாம். உரவோர் என்றதனால் பெருந்தன்மை யென்பது பெறப்பட்டது. என்கை - என்று சொல்லப்படுகை, என்று சொல்லப்படும் பெருந்தன்மை. வருந்திய விடத்தும் என்றது இசையெச்சம். வருந்தியும் இரவாதிருத்தலால் அதனைப் பெருந்தன்மை யென்றது ஔபசாரிகம். இச்சூத்திரத்தில் வகரவுடம்படுமெய் வருதற்கேற்ற அகரவீற்று அம்மவென்னும் உரையசைச்சொல் கூட்டினதற்கு ஆத்திசூடியில், "அம்மவுத்தமனுயிரு" என்னுஞ் சூத்திரத்திற்கூறியது காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இரவச்சம் - ௬ - ம் பாட்டு,

"இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு."

இடம் இல்லாக்காலும் - நுகரவேண்டுமெனவின்றி நல்கூர்ந்த வழியும், இரவு ஒல்லாசால்பு-பிறர்பாற் சென்றிரத்தலையுடம்படாத அமைதி, இடம் எல்லாம் கொள்ளா - எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலும் கொள்ளாத, தகைத்து - பெருமை யுடைத்து. நுகர்தல் - அநுபவித்தல். நல்கூர்தல் - வறியராதல். இரத்தல் - யாசித்தல். அமைதி - நிறைவு. இடமிரண்டனுள் முன்னது உலகை யுணர்த்திற்று. இயைதல் - கூடுதல்.

86. அம்ம, வூக்கமுடைமை யாக்கத்திற்கழகு.

(ப-ரை.) ஊக்கம் உடைமை - மனந் தளராதிருக்குந் தன்மை, ஆக்கத்திற்கு - முன்னெய்திநின்ற செல்வத்திற்கு, அழகு - அழகு செய்யும், எ-று.

(க-ரை.) மனந் தளராதிருக்குந் தன்மை முன்னெய்திநின்ற செல்வத்திற்கு அழகுசெய்யும் என்பதாம்.

(வி-ரை.) ஊக்கம் - மனவெழுச்சி (உத்ஸாஹம்). உடைமை- உடைத்தாந்தன்மை. ஆக்கம் - செல்வம்.

ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகுஎன்றதனால், ஊக்கமின்மை யாக்கத்திற்கழிவு என்றதுமாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஊக்கமுடைமை - க - ம் பாட்டு,

“ உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லார்
உடைய துடையரோ மற்று. ”

உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடையரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம், அஃது இல்லார் - அவ்வூக்க மில்லாதார், மற்று உடையது உடையரோ - வேறுடையதுதானும் உடையராவரோ, ஆகார். வேறுடையதென்றது-முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்கும் ஆற்றலிலராகலின் அதுவு மிழப்பர் என்பதாம்.

87. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை.

(ப-உரை.) கள்ளச்சிந்தை - கள்ளநினைப்பு, வெள்ளைக்கு - மனத்தூய்மை யுடையவனுக்கு, இல்லை-இயற்கையாகவேயில்லை, எ-று.

(க-ரை.) கள்ளநினைப்பானது மனத்தூய்மை யுடையவனுக்கு இயற்கையாகவே யில்லையென்பதாம்.

(வி-ரை.) வெள்ளை - ஆகுபெயர். இயர்கையாகவே யில்லையென்றதனால் பிறர் செயற்கையின் உண்டென்றதாயிற்று. இயற்கையாகவே யென்றது சொல்லெச்சம்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-சிற்றினஞ்சேராமை-௪-ம் பாட்டு,

"மனத்துளது போலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு."

அறிவு - அவ்விசேடவுணர்வு, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்து உளதுபோலக்காட்டி - மனத்தின்கண்ணே உளதாவதுபோலத் தன்னைப்புலப்படுத்தி, இனத்து உளதுஆகும் - அவன்சேர்ந்த இனத்தின்கண்ணே யுளதாம்.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளது போன்று காட்டியும் பின் நோக்கியவழிப் பயின்ற இனத்துளதாயு மிருத்தலின் காட்டி யென இறந்தகாலத்தாற் கூறினார். விசேட வுணர்வுதானும் மனத்தின்கண்ணே யன்றே யுளதாவதென்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந்துணையேயுள்ளது. அதற்கு மூலம் இனமென்பது இதனாற்கூறப்பட்டது. இதில் அறிவு என்றது நல்லறிவுபுல்லறிவு என்னு மிரண்டனையு மெனக்காண்க.

88. வேந்தன்சீறின் ஆந்துணையில்லை.

(ப-உரை.) வேந்தன் - அரசனானவன், சீறின் - (ஒருவனைச்) சினந்து தண்டிக்கப் புகுவானாயின், ஆம்துணை இல்லை-(அப்போது அவனுக்கு) உதவியாகுந்துணை ஒருவருமில்லை, எ-று.

(க-ரை.) அரசனானவன் ஒருவனைச் சினந்து தண்டிக்கப்புகுவானாயின், அப்போது அவனுக்கு உதவியாகுந்துணையொருவருமில்லையென்பதாம்.

(வி-ரை.) சீறின் என்பது தண்டித்தலென்னுங்காரியந்தோன்ற நின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பெரியாரைப்பிழையாமை - ரு - ம் பாட்டு,

"யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்."

வெந்துப்பின் - (பகைவர்க்கு) வெய்தாய வலியினையுடைய, வேந்து - வேந்தனால், செறப்பட்டவர் - செறப்பட்ட அரசர், யாண்டுச்சென்று யாண்டும் உளர் ஆகார் - (அவனைத் தப்பி) எங்கேயோ யுளராவர், ஓரிடத்தும் உளர்ஆகார். இடைவந்த சொற்கள் அவாய் நிலையான்வந்தன. வெந்துப்பின் வேந்தாகலால், தம் நிலம்விட்டுப் போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை, உளராயின், இவர் இனியாகாரென்பது நோக்கி அவனோடு நட்புக்கோடற் பொருட்டும், தாமே வந்தெய்திய அவருடைமையை வெளவுதற் பொருட்டும் கொல்வர், அன்றெனின் உடனேயழிவரென்பன நோக்கி 'யாண்டுச் சென்றி யாண்டு முளராகார்' என்றார். வேந்து - பண்பாகுபெயர். செறல் - கோபித்தல்.

89. வையந்தோறுந் தெய்வந்தொழு.

(ப-ரை.) வையம்தோறும் - உலகமெங்குமுள்ள, தெய்வம்-கடவுளை (ஆதிபகவனை), தொழு - நீ அன்புகூர்ந்து வணங்கு, எ-று.

(க-ரை.) உலகமெங்குமுள்ள ஆதிபகவனாகிய கடவுளை நீயன்பு கூர்ந்து வணங்கு என்பதாம்.

(வி-ரை.) எஞ்சாப்பொருட்டாயதோர் ஏழாம் வேற்றுமையுருபின் பொருள்படவந்த தோறும் என்பதற்கு உள்ள என்னும் பயனிலைதொக்குநின்றது. வையந்தோறுமுள்ள தெய்வம் என்றதனால் ஆதிபகவன் என்பது பெறப்பட்டது. தொழுதால் வீட்டுலகின்கண் எக்காலத்தும் அழிவின்றி வாழலாமென்ப திதனாற்போந்த பொருள். தொழு என்பது வணங்கு எனப் பொருள்படுவதோர் சொல்லாயினும் ஈண்டு முக்கரண வழிபாட்டையு முணர்த்திற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கடவுள்வாழ்த்து - ௩ - ம் பாட்டு,

" மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

மலர்மிசை - மலரின்கண்ணே, ஏகினான் - சென்றவனது, மாண் அடி - மாட்சிமைப்பட்ட அடிகளை, சேர்ந்தார் - சேர்ந்தவர், நில மிசை - எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண், நீடு வாழ் வார் - அழிவின்றி வாழ்வார்.

அன்பால் நினைவாரது இதயகமலத்தின்கண் அவர் நினைந்தவடி வோடு விரைந்து செல்லுதலால், ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார். இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கேற்றுவாருமுளர். சேர்தல் - இடைவிடாது நினை த்தல். நிலம் - இவ்விடத்து உலகைக் குறித்தது.

90. அம்ம, வொத்தவிடத்து நித்திரைசெய்.

(ப-ரை.) ஒத்த இடத்து - (முன்பு உன்பாடத்தைப் போற்றிப் பின்பு நீ யாசிரியனிடத்தில் முன்கேட்ட வுரைப்பொருள்களைச் சிந் தித்து, அவற்றுள் உனக்கொவ்வாதனவற்றை, மீட்டும் அவ்வாசிரி யனையடுத்துவினவி) உன்மனத்திற்கு ஒத்ததாயின், நித்திரை செய்- (சிறிது) நித்திரையுஞ் செய், எ-று.

(க-ரை.) முன்பு உன்பாடத்தைப் போற்றிப் பின்பு நீ யாசிரிய னிடத்தில் முன்கேட்ட வுரைப்பொருள்களைச் சிந்தித்து, அவற்றுள் உனக்கொவ்வாதனவற்றை மீட்டும் அவ்வாசிரியனை யடுத்து வினவி உன்மனத்திற்கு ஒத்ததாயின் சிறிது நித்திரையுஞ் செய்யக்கடவை யென்பதாம்.

(வி-ரை.) உம்மையால் சிறிது வயிற்றிற்கும் உணவிட்டு எனக் கொள்க. ஒவ்வாதாயின் அவற்றையும் ஒழிக்கவேண்டு மென்றதாயி ற்று. ஒத்தவிடத்து என்றது காழ்த்தவிடத்து என்றாற்போல இறந்த காலம்பற்றி வரும் இடத்தீற்று வினையெச்சமெனக் காண்க. வேண் டியே சிற்றலால் இசையெச்சம் வருவித்துரைக்கப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள்- கேள்வி - ௨ - ம் பாட்டு,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிதூண்
வயிற்றிற்கு மீயப் படும்."

செவிக்கு உணவு 'இல்லாதபோழ்து' - செவிக்குணவாகிய கேள்வியில்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது ஊண் ஈயப்படும் - வயிற்றிற்கும் சிறிதுணவு இடப்படும்.

சுவைமிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வியுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் 'இல்லாதபோழ்து' என்றும், பெரிதாயவழித் தேடற்றுன்பமேயன்றி நோயும் சாமமும் பெருகுதலால் 'சிறிதூண்' என்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற் பொருட்டாகலான், 'ஈயப்படும்' என்றும் கூறினர். ஈதல் வயிற்றதிழிவுதோன்ற நின்றது. "ஒத்தவிடத்து நித்திரைகொள்" என்றும் பாடம். இதற்கு, மேடு பள்ளமில்லாமற் சமமான இடத்திலே நீ படுத்து நித்திரை பண்ணு என்பது பொருள்.

91. அம்ம, வோதாதார்க்கில்லை யுணர்வுடையோழுக்கம்.

(ப-ரை.) ஓதாதார்க்கு - (அறிவு நூல்களைக்) கல்லாதவர்க்கு, உணர்வு உடை ஒழுக்கம் - அந்த நூலறிவு மனத்தொடுபட்டு வருகின்ற நல்ல நடை, இல்லை-இல்லையாகும், எ-று.

(க-ரை.) அறிவுநூல்களைக் கல்லாதவர்க்கு, அந்த நூலறிவு மனத்தொடுபட்டுவருகிற நல்ல நடை யில்லையாகும் என்பதாம்.

(வி-ரை.) உணர்வுடை யொழுக்கம் என்றதனால் அறிவு நூல்கள் என்பதும் நல்லொழுக்கம் என்பதும் பெறப்பட்டன. அந்நூலறிவு மனத்தொடுபட்டு வருவதில்லை யெனவே, கல்லாதார்மதி நுட்ப முடையராயின் ஒரோவிடங்களில் மனத்தொடுபடாது வரும் என்றதாயிற்று. அவ்வாறு வரினும் அது நீர்மேலெழுத்துப்போல நிலைபெறாதழியுமென்று, நிலைபெற்ற நூலறிவுடையோர் ஏற்றுக் கொள்ளாராதலால் 'இல்லை' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-கல்லாமை - ச-ம் பாட்டு.

"கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்."

கல்லாதான் ஒட்பம் - கல்லாதவனது ஒண்மை, கழிய நன்று ஆயினும் - மிக நன்றாயிருப்பினும், அறிவு உடையார் கொள்ளார்- அறிவுடையார் அதனை ஒண்மையாகக் கொள்ளார். ஒண்மை-அறிவுடைமை. அது நன்றாகாது ஆயிற்றாயினும் நீர்மேலெழுத்துப்போல் வதோர் விழுக்காடாகலின் நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியார் என்பதாம். அறிவுடையார் கொள்ளார் என்றமையால் அறிவிலார் கொள்வர் என்பதும் பெறப்பட்டது. ஆயினும் என்னும் உம்மை எதிர்மறை, ஆகாதென்றுணர நிற்றலின். கழிய - உரிச்சொல்லடியாகப் பிறந்த நிகழ்கால வினையெச்சம்.

'ஓதாதார்க்கில்லை யுணர்வொடு மொழுக்கம்" என்றும் பாடம். இதற்கு, அறிவுநூல்களைப் படியாதவர்க்கு அறிவுடனே நல்ல நடையும் உண்டாதலில்லை யென்பது பொருள்.

கொன்றைவேந்தன் விருத்தியுரை

முற்றிற்று.